35 ஆவது

துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

Scan QR Code
ISSN 2792-1026

முக்காலமும் வென்று மூன்றாம் அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் துணிந்தெழு சஞ்சிகை

+94757000791 www.skytamilnews.com skytamil.lk@gmail.com

மாதந்தோறும் இதழ் - 35 30 ஒகஸ்ட் 2024 @skytamil.lk

Sky Tamil Media Network (Pvt) Ltd

உங்கள் புகைப்படக்கலை திறனை எவ்வாறு மேம்படுத்தலாம்.

உலக கிண்ணமும் இந்தியா அணியின் வெற்றியும்

தொலைபேசியும் தொலைந்து போகும் சமூகமும்.

இப்படியும் சிலர் சிறுகதை

உலக பணக்கார பெண்மணி நீத்தா அம்பாணி

ஸ்கை தமிழ் விருது விழாவைப் பற்றிய நேர்காணல்

இம்மாத ஆளுமை

சித்தி மஷூறா சுஹூறுத்தீன்.

அவர்களுடனான நேர்காணல்....

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙඩ්
Reg No: PV 00249082

ஜே.எம்.பாஸித்
ஸ்தாபகர், பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188

ஷிஹானா நௌபர்
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை
+94781069510

இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

ஆலோசகர்கள் :
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (நளீமி) - கத்தார்

ஸ்தாபகர், பணிப்பாளர்: ஜே.எம். பாஸித்

பிரதம ஆசிரியர்:
ஷிஹானா நௌபர் - பலாங்கொடை

இணையாசிரியர்:
ஸகியா பாறுக் - சம்மாந்துறை
மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி
ஹுஸைப் முஸம்மில் - வடதெனிய

ஆசிரியர் குழு :
முனீரா வாஹித் - பதுளை
குலசிங்கம் கிலசன் - கல்முனை
ஜவ்சன் அஹமட் - மருதமுனை
எம்.பஹ்த் ஜுனைட் - காத்தான்குடி
கமறுன் நிஸாம் (ஷாமென்) - கண்டி
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா – கொழும்பு
சி. கற்பஹாசினி - பலாங்கொடை
பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்
ஷீபா இப்றாஹீம் - மருதமுனை
றிஹானா இஷாக் - கம்பளை
பயாஸா பாஸில் - கம்பஹா
மொஹமட் நிப்ராஸ் - வாழைச்சேனை
நூர் ஷாஹிதா - கொழும்பு
ஏ.சி.எம் .ஆதிப் - மல்வானை
ஷிபானா அஸீம் - மருதமுனை

சமூக ஊடக குழு:
எம்.ஆர். சப்ராஸ் - புத்தளம் (முகாமையாளர்)
பாத்திமா சம்சுடீன் - சாய்ந்தமருது
நிஹாசா நிசார் - கத்தார்
அவ்ஷபா நாகூர்- ஏறாவூர்

இணையத்தள பொறுப்பாளர்:
அஸ்ரி இப்னு அமீர் - அட்டாளைச்சேனை

தொகுப்பாளர்கள் :
ஆஷிகா பர்சான் - கொழும்பு
அர்சிதா அமீர் - ஓட்டமாவடி

விளம்பர பொறுப்பாளர்:
ரிப்னா ரிபாய் - மாவனல்லை

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com

ஹுபைப் முஸம்மில், வடதெனீய

உங்கள் புகைப்படக்கலை திறனை எவ்வாறு மேம்படுத்தலாம்.

சிறந்த புகைப்படங்களுக்கான நுட்பங்கள்.

நீங்கள் புகைப்படங்களை எடுக்கும் போது அவை எவ்வாறு எளிய புகைப்படங்கள் (simple snaps) போல் காணப்படுகின்றன? இது ஒரு பொதுவான கேள்வி, புகைப்படக் கலையில் புதியவர்களுக்கும், பல ஆண்டுகளாக புகைப்படங்களை எடுக்கும் அனுபவசாலிகளுக்கும் இது ஏற்படலாம்.

புகைப்படம் எடுப்பது எளிதாகத் தோன்றினாலும், சில எளிய யுக்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் ஒரு நுணுக்கமான புகைப்படக் கலைஞராக (professional photographer) மாற முடியும். நவீன புகைப்படக் கலையில் பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட ஒரு சில எளிய நடைமுறைகளைப் பயன்படுத்தி, உங்கள் படங்களை சிறப்பாகவும் தனித்துவமாகவும் (Unique) மாற்றலாம்.

1. காட்சியமைப்பின் விதிமுறைகளை (Composition Rules) கற்றுக்கொள்வது முக்கியமாகும்.

ஒவ்வொரு புகைப்படத்திற்கும் காட்சியமைப்பு (composition) மிக முக்கியம். காட்சியை எப்படி கட்டமைப்பது மற்றும் அதை அழகாக செய்ய என்ன செய்யலாம் என்பதில் கவனம் செலுத்துங்கள்.

- மூன்று முறை விதி (Rule of Thirds): உங்கள் காட்சியை 9 சமபாகங்களாகப் பிரித்து, முக்கிய அம்சங்களை அந்த இடங்களில் வைத்திருங்கள். இது உங்கள் புகைப்படத்திற்கு சமநிலை (balance) மற்றும் கவனத்தை (focus) தரும்.

- முன்னணி கோடுகள் (Leading Lines): பார்வையாளர்களின் கண்களை படத்தில் நுழைக்கும் வழியாக கோடுகளை அல்லது வரிகளை (lines) பயன்படுத்தி படம்பிடித்தல். இது பார்வையாளர்களின் கவனத்தை உங்கள் படத்தின் முக்கிய அம்சங்களின் பக்கம் திருப்ப உதவும்.

2. ஒளியின் மேன்மையை உணருங்கள். (Understand the Power of Light)

ஒளி (light) என்பது புகைப்படங்களின் உயிர். ஒளியின் திசை (direction), வலிமை (intensity) மற்றும் நிறம் (colour) ஆகியவற்றை உணர்ந்து, அவற்றைப் பயன்படுத்தி உங்கள் படங்களை மேம்படுத்துங்கள்.

- இயற்கை ஒளி (Natural Light): அதிகப் பிரகாசமான, பளபளப்பான பகுதியை தவிர்த்து, மென்மையான ஒளியில் (soft light) படங்களை எடுங்கள். மாலை மற்றும் காலை நேரங்களில், இயற்கை ஒளி மிகவும் மென்மையானதாக இருக்கும்.

- செயற்கை ஒளி (artificial lighting): ஸ்டுடியோ விளக்குகள் (studio lights) அல்லது LED விளக்குகள் போன்ற கருவிகளைப் பயன்படுத்தி, உங்கள் புகைப்படங்களில் ஒளியின் கட்டுப்பாட்டை (control) சரி செய்து கொள்ளுங்கள்.

3. நுணுக்கங்களை அறிந்து படம் பிடித்தல். (Master the Details)

பெரும்பாலான புகைப்படங்களின் தனித்துவம் அதன் நுணுக்கங்களில் (details) இருக்கும். மெக்ரோ (macro shots), கச்சிதமான புள்ளிகள் (fine points) மற்றும் தனித்துவமான அம்சங்களை (unique features) கவனத்தில் கொள்தல்.

- முக்கிய அம்சங்களை பிரகாசமாக வெளிக்காட்டுதல் (Enhance Highlights): உங்கள் படங்களில் உள்ள முக்கிய அம்சங்களை (highlights) வெளிப்படுத்துங்கள்.

- தனித்துவமான அம்சங்கள் (Unique Elements): சிறிய, அழகிய அம்சங்களை (tiny details) உங்களின் படங்களில் புகுத்துங்கள். இது உங்கள் புகைப்படங்களுக்கு ஆழமான (depth) மற்றும் தனித்துவமான தோற்றம் (unique look) கொடுக்கும்.

4. எளிய கருவிகளை பயன்படுத்துங்கள். (Use Simple Effectively)

மிகுந்த பயனுள்ள புகைப்படங்களை எடுக்க சிறந்த கருவிகள் தேவை என்பதை உணருங்கள். ஆனால், அடிப்படையான கருவிகளைப் பயன்படுத்தி சரியான பயிற்சிகளை மேற்கொண்டால், நீங்கள் இன்னும் சிறப்பாக படங்களை (photos) எடுக்க முடியும்.

- சரியான லென்ஸ் தேர்வு (Choose the Right Lens): உங்கள் படத்திற்கு ஏற்ப பொருத்தமான லென்ஸ்களை (lens) தேர்வு செய்யுங்கள். பொதுவாக prime lenses. மற்றும் zoom lenses இரண்டும் நல்ல தெரிவாகக் காணப்படும்.

- தொகுப்பு கருவிகள் (Editing Tools): புகைப்படங்களை மேலும் அழகாக்க நவீன Editing மென்பொருட்களை (photo editing software) பயன்படுத்துங்கள். உங்களுக்கு தெரிந்த நிற, ஒளி மற்றும் நிழல்களை (color, light, shadow) திருத்தி, படங்களை மேம்படுத்தலாம்.

5. தொடர்ந்து பயிற்சி செய்யுங்கள். (Practice Regularly)

தொடர்ந்து புகைப்படங்களை எடுத்து, புதிய யுக்திகளை (new techniques) முயற்சிப்பது மிக முக்கியம். ஒரே மாதிரிப் படங்களை எடுப்பதைவிட, புதிய இடங்களை (new locations) ஆராய்ந்து, தனித்துவமான காட்சிகளை (unique scenes) எடுக்க முயற்சி செய்தல்.

- வாராந்திர திட்டம் (Weekly Schedule): வாரத்திற்கு ஒருமுறை, நீங்கள் கற்றுக்கொண்ட புதிய குறிப்புகளை (tips) முயற்சிக்க ஒரு புகைப்பட விஜயத்தை அமைத்துக்கொள்ளுங்கள்.

- புதுமையான நுட்பங்களை கையால்தல் (Creative tecqniues): வெவ்வேறு யுக்திகளை (various techniques) கற்றுக்கொண்டு, அவற்றைப் பயன்படுத்தி உங்கள் படங்களை மேம்படுத்துங்கள்.

புகைப்படக் கலை என்பது கடினமான ஒன்றாக இருக்க வேண்டியதில்லை. சில எளிய குறிப்புகள் (simple tips) மற்றும் யுக்திகளை (techniques) பயன்படுத்துவதன் மூலம், உங்கள் படங்களை மேலும் நுணுக்கமாகவும் (sophisticated), அழகாகவும் (beautiful) மாற்ற முடியும். ஒவ்வொரு புகைப்படத்திலும் உங்கள் தனிப்பட்ட கலை உணர்வை (personal artistic touch) வெளிப்படுத்தி, உங்கள் புகைப்படத் திறனை (photography skills) மேம்படுத்துங்கள்.



உன்னத சங்கீதம்

காலத்தின் தேவையா

நூல் :- உன்னத சங்கீதம்
நூலாசிரியர் :- பானுபாரதி
வகை :- நோர்வேஜிய கவிதைகள் தமிழ் மொழிபெயர்ப்பு.
பக்கங்கள் :- 80
வெளியீடு :- கருப்பு பிரதிகள்
காலம் :- 2022 ஒக்டோபர்

பானுபாரதி தமிழில் மொழிபெயர்ப்பு செய்த “உன்னத சங்கீதம்” எனும் இக் கவிதைப் பிரதி “நார்வேஜியக் கவிதைகள்” என அடிக்கோடிட்டு சொல்லப்படுகிறது இதன் முதல் பதிப்பை 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் “கருப்புப் பிரதிகள்” வெளியிட்டகம் வெளியீடு செய்து வைத்திருக்கிறது வடிவமைப்பு திறன்களை செவ்வையாகவும் நேர்த்தியாகவும் தத்ரூபமான குறியீட்டு முறையில் செய்திருக்கிறார் “ஜீவமணி” அவர்கள்.

முன் அட்டை படத்தில் ஒரு பெண் பெரும் ஊது குழல் ஒன்றை ஊதுவது போன்றதொரு காட்சியை இலத்திரனியல் வரைபடமாக இங்கு காட்சி படுத்தி இருக்கிறார்கள் புத்தகத்தை கைகளில் எடுத்தவுடன் மனக்கண்ணில் முதலில் தோன்றுவது இந்தப் படத்துக்கான அறிவிப்பு எதுவாக இருக்கும் என்பது ஆனால் உள்ளே திறந்து படிக்கின்ற போது அது எதற்கான படம் என்பதை இங்கு எழுத்துருவில் காட்சிப்படுத்துகிறார்கள்
.

இங்கு பெண் ஒருவர் காட்சிப்படுத்தப்படுகிறார் அவர் நோர்வையில் உள்ள ஆதிச்சிறுபாண்மை இனமான “சாமர்” இனத்தைச் சேர்ந்த பெண்ணாவார், இவர் இசைக்கின்ற பழமை வாய்ந்த இசைக்கருவியை “லூர்” என்று அழைப்பார்கள். இந்த இசைக் கருவி “உலோகம்” மற்றும் ‘பிர்க்கு” மரத்தினால் செய்யப்பட்டது இது 18 ஆம் நூற்றாண்டு சேர்ந்த பழமை வாய்ந்த இசைக்கருவி என நம்பப்படுகிறது.

இன முறுகலின் இடையே இருந்து தன் ஜீவியத்தை எதிர்கொள்ள முடியாமல் புகழிடம் தேடி புறப்பட்ட பெண் ஒருத்தி இங்கு பெண் விடுதலைக்காகவும் சிறந்த சிந்தனைக்காகவும் வேண்டி கவிதைகளை படிக்க , படைக்கத் துவங்குகிறாள் அதிலும் குறிப்பாக “மரிய தக்வாம்” மின் வழித்தோன்றல்களை பின்பற்றும் ஒருவராகவும் காணக் கிடைக்கிறது.

இங்கு பானுபாரதியை அறிமுகம் செய்கின்ற போது அவர் ஒரு சமூக செயற்பாட்டாளராகவும் சமூக சிந்தனை கொண்டவராகவும் குறிப்பிட்டு காட்டப்படுகிறார் அதிலும் குறிப்பாக ஈழத்து போர்க்காலங்களில் தன்னை முற்று முழுதாக போராட்டத்தில் அர்ப்பணித்த ஒருவராகவும் கிராமத்து வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டவராகவும் சித்தரிக்கப்படுகிறது.
1965 ஆம் ஆண்டு “யாழ்பாணத்தில் உரும்பிராய்” கிராமத்தில் பிறந்த கவிஞர் பானுபாரதி அவர்கள் 1990 ஆம் ஆண்டு புலம்பெயர்ந்து நோர்வையில் வசிக்கத் துவங்குகிறார் இவருடைய வாழ்க்கை முறை அகதி என்னும் புனைப் பெயரோடு ஆரம்பிக்கிறது அதிலும் தன் இலக்கியச் செயற்பாடுகளை விட்டு விடாமல் “சுமைகள்” எனும் சஞ்சிகை தொடர் ஒன்றை நண்பர்களோடு வெளியீடு செய்திருப்பது அடிக்கோடிட்டு சொல்லப்பட வேண்டிய விடயமாகும்.

இவரது “பிறந்தியாள்” என்கின்ற கவிதை தொகுதி எல்லோராலும் மிக போற்றப்பட்டு நேசிக்கப்பட்ட ஒரு பிரதியாக காணப்படுகிறது.

நூலாசிரியர் பற்றிய சிறிய தேடலோடு என் வாசிப்பு பணி தொடர ஆரம்பிக்கிறது உள்ளடக்கத்தில் முன்னுரையை “வா. கீதா” அவர்கள் எழுதியிருக்கிறார் அதைத் தொடர்ந்து நூல் ஆசிரியர் மொழிபெயர்ப்பாளர் கவிஞர் பானுபாரதி அவர்கள் முன்னுரையை மிக

அழகாகவும் நேர்த்தியாகவும் ,செய்வையாக வாசகர்களை நோக்கி தூது விடுகிறார்.

முன்னுரையில் "வா.கீதா" அவர்கள் "துளி துளி மூக்குக் கொண்ட பறவையாக பாரதியால் அடையாளப்படுத்தப்பட்ட அந்த சின்னஞ்சிறு உயிரினம் பானுபாரதியின் கவிதைகளில் பேசாப் பொருட்களை பேசத்துணிந்த கதாபாத்திரமாக உருவெடுக்கிறது" என்கிறார்.

அதற்கு சான்றாக முன்னுரையின் முற்பகுதியிலே பானுபாரதியின் கவிதை ஒன்றை சமர்ப்பிக்கிறார் அதன் பிற்பாடு நான்கு ஐந்து பக்கங்களுக்கு மிகையாக பானு பாரதியின் கவிதைகளை ஆராயத் துவங்கி இங்கு தொடராக அவைகளை சுட்டி காட்டி பேசியிருக்கிறார் அவர் பேசிய அத்தனைகளும் மிக அருத்தம் உள்ளவையாகவும் வாசகர்களுக்கு இக்கவிதைப் பிரதி இலகுவானதொரு கண்ணோட்டத்தை உருவாக்கவும் உதவும் என நம்புகிறேன்.

மேலும் முன்னுரை ஆசிரியர் தொடர்கின்றபோது பானுபாரதி அவர்கள் தெரிவு செய்த கவிஞர்களில் மூவர் பெண்கள் என்பதையும் பெண் விடுதலை, சமத்துவம் அகியவற்றில் அக்கறை உள்ளவர்கள் அந்த மூவரும் என்ற செய்தியை சொல்கிறார்.

மொழிபெயர்ப்பாளரின் முன்னுரைக்குள் வாசிப்பின் அடுத்த கட்டம் நகர்கின்ற போது "மொழிபெயர்ப்பாளர்கள் துரோகிகள்" என்ற இத்தாலிய பழமொழி ஒன்றை ஞாபகப்படுத்திக் கொண்டு அந்த துரோகத்தை நானும் செய்யத் துவங்கி பல வருடங்கள் ஆகின்றது என்றே சொல்லி ஆரம்பிக்கிறார் அதில் அவர் நோர்வேயினது மொழியின் வரலாறு 700 ஆண்டுகளில் இருந்து பல மாற்றங்களுக்கு உட்பட்டு வந்ததாகவும் அந்த நாட்டின் சுதந்திரமான மொழியாக நீண்ட காலமாக "டென்னிஸ்" மொழி பயன்படுத்தப்பட்டதாகவும் அதனோடு ஒட்டியதான பல வரலாற்றுச் சம்பவங்களையும் பல கவிஞர்கள் வரலாற்று ஆசிரியர்களையும் இங்கு அவர் குறிப்பிட்டு எழுத துவங்குகிறார். \

அதிலும் குறிப்பாக கவிஞர் மரிய தக்வாமுடைய கவிதைகள் மீது தான் ஆர்வம் கொண்டதாகவும் அதிலிருந்து தன் மொழிபெயர்ப்பு பணியை துவங்கியதாகவும் தான் மொழி பெயர்த்த கவிதைகள் "உயிர்நிழல் இதழில்" வெளிவந்த செய்தியையும் ஆதாரப்பூர்வமாக இங்கு குறிப்பிட்டு காட்டுகிறார்.

அடுத்ததாக "இங்கர் ஹாகரூப்" கவிகைகள்மீது தான் கொண்ட ஆர்வத்தையும் அவருடைய கவிதைகளுக்கு தான் மிகுந்த ஆர்வமுள்ள வாசகி என்பதையும் இங்கு நிரூபித்து காட்டும் விதத்தில் அவர் எழுதியிருக்கிறார், அவரது எளுத்துக்கள் மீது தனக்கு ஈர்ப்பு ஏற்பட்டதற்கான காரணத்தை சொல்லுகின்ற போது குறிப்பாக பெண் விடுதலையை அவர் பேசி இருப்பதை அடிக்கோடிட்டு காட்டி இருக்கிறார்.

நூலாசிரியர் சொல்வதை போன்று பெண் விடுதலையை பேசியதற்காக வேண்டி மட்டும் இவர் அவருடைய ("இங்கர் ஹாகரூப்") கவிதைகள் மீது ஈர்க்கப்படுகிறார் என்றால் கட்டாயம் நூலாசிரியரும் ஒரு பெண் நிலை வாதியாகவே இங்கு கருதப்படுகிறார்.

இப்படி பேசுகின்ற நூலாசிரியரின் முன்னுரையிலிருந்து நோர்வே எனும் நாடு ஆண் ஆதிக்கத்தை தவிர்த்து பெண்களுக்கான பெண்ணியத்தையும் பெண் விடுதலையையும் பறைசாற்றுகின்ற விதமாகவும் அதற்கு சான்றாக பல்வேறு கவிஞர்களது பெண் விடுதலை கவிதைகளையும் நோக்க முடிகிறது.

இங்கு கவிதைகளை வாசிப்பதற்கு முன்னர் அல்லது வாசிப்பு பயணம் ஆரம்பிக்கும் தறுவாயில் நூலாசிரியரை நோக்கி அல்லது வாசகனை நோக்கி சில கேள்விகளை சமர்ப்பிக்கலாம் என நினைக்கிறேன் அக்கேள்விகள் சில நேரம் காலத்தில் தேவையாகவும் சில நேரம் ஏன் இப்படி கேட்க வேண்டும் என்ற எதிர்வீச்சு அலைகளை உருவாக்க கூடும் ஆயினும் நூலை வாசிக்கின்ற போது எனக்குள் உருவான கேள்விகளாகவே இவை அமைகிறன.

நோர்வெஜிய கவிதைகள்

மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டிய காலத்தின் தேவை என்ன? ஒரு மொழியை எடுத்துக் கொள்கின்ற போது அதில் இலக்கண இலக்கிய செயற்பாட்டாளர்கள் இருப்பது என்பது வளமை ஆனால் இங்கு குறிப்பிட்ட ஒரு சிலரது கவிதைகள் மட்டும் காட்சிப்படுத்தப்பட்டது ஏன் ஈழத்திலிருந்து உலகின் பல பகுதிகளுக்கு பலர் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள் அதற்கான காரணமாக ஈழத்துப் போர் சுட்டிக்காட்டப்படுகிறது அப்படி புலம்பெயர்ந்து வாழ்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழ் மீது புலமை கொண்டவர்கள் அவர்களின் படைப்புகள் தொடர்ந்தும் வெளியீடு செய்யப்பட்டுக் கொண்டே இருக்கிறது அப்படி இருக்க ஏன் தனது சொந்த படைப்பு நூலுரு படுத்தப்படாமல் நோர்வேஜிய கவிதைகள் நூலுருப்படுத்தப் படுகிறது. தமிழில் மொழி பெயர்த்த பானு பாரதி அவர்கள் ஒரு பெண்நிலை வாதியா? ஆணாதிக்கம் என்னும் பெயரில் பெண்ணியம் பேசும் மேற்கத்திய வாதிகளின் கொள்கைகளை எமது நாட்டிலும் பரப்ப துணிந்துள்ளாரா? தமிழ் மொழியிலான கவிதை பிரதிகள் அல்லது ஏனைய பிரதிகள் இதுவரை நோர்வேஜிய கவிதைகள் எத்தனை மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது? அதில் பானு பாரதியின் பங்களிப்பு என்ன? இந்த நூலுக்காக தெரிவு செய்த கவிஞர்களும் தெரிவு செய்யப்பட்ட அவர்களது கவிதைகளும் ஒரு குறுகிய வட்டத்தை மையப்படுத்தியதாக அமைவதன் இரகசியம் என்ன?

இதுபோன்று விடை தேடப்பட வேண்டிய இன்னும் பல கேள்விகளும் வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டிய பதில்களும் நிறைய இந்த நூலின் ஊடாக பிரஸ்தாபிக்கப்பட வேண்டும் ஆயினும் இந் நூலை நான் திறனாய்வு செய்வதற்கான தேவைப்பாடு என்பது துளியும் இல்லை இருப்பினும் இது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது என்பதனால் இதில் உள்ளடங்கியுள்ள சில ஆரோக்கியமான கருத்துக்களை மட்டும் வாசகர்களுக்கு வெளிப்படுத்துகிறேன்.

உண்மையில் இதை திறனாய்வு செய்வதாக இருந்தால் நோர்வேஜிய மொழியிலான கவிதைகளையும் இங்கு ஆய்ந்து அவைகளோடு இதன் மொழியாக்கம் எப்படி இருக்கிறது என ஒப்பு உவமை செய்து நோக்க வேண்டும் ஆனால் நோர்வேஜிய மொழியை கற்றுக் கொள்வது என்பது எனக்கு தேவையற்ற வீண் வேலையென என்ன தோணுகிறது.

தொடர்கின்ற வாசிப்பில் 25 ஆம் பக்கம் “மரிய தக்வாம்” பற்றி ஒற்றை பக்கத்தில் அவர் புகைப்படத்தோடு விவரிக்கிறார் அதில் நோர்வேஜிய முன்னணி கவிஞரான மரிய தக்வாம் 1926 டிசம்பர் மாதம் ஆறாம் தேதி நோர்வேயில் பிறந்ததாகவும் 1952 ல் அவருடைய முதல் கவிதை வெளியிடான “ஏழு நட்சத்திரங்களின் கீழ் திருமுழுக்கு” எனும் பிரதி பிரசுரமானதையும் சுட்டிக்காட்டி அறிமுக உரை வரைகிறார்.

மொத்தமாக இவர் பதிமூன்று கவிதைத் தொகுப்புகளையும் இரண்டு நாவல்களையும் நாடக பிரதகளையும் தன் படைப்பாக வெளியீடு செய்திருப்பதாகவும் திரைப்படங்கள் மீது இவர் கொண்ட அதீத ஈடுபாடு 97 க்கும் 81 க்கும் இடைப்பட்ட திரைப்படங்களில் நடிக்கும் சந்தர்ப்பமும் கிட்டியது என்ற செய்தியோடு 2008 தை மாதம் 28ஆம் திகதி தனது 82 ஆவது வயதில் அவர் காலமான செய்தியையும் அதன் பின்னராக அவருடைய கவிதைகள் கொண்டாடப்பட்டதையும் அவர் பற்றிய சிறு குறிப்பை பெண்நிலைவாதியான “மாரியான் சைட்டோ” அவர்கள் எழுதி பத்திரிகைகளில் பிரசுரம் செய்திருந்தார்கள் என்பதையும் இங்கு நியாபகப்படுத்துகிறார் நூலாசிரியர்.

அடுத்ததாக 26 ஆவது பக்கம் உன்னத “சங்கீதம் என்ற தலைப்போடு “மாரியான் சைட்டோ” “உயிர்மெய் இதழில்” “மரிய தக்வாம்” பற்றி எழுதிய “ஒரு வாசகையின் குறிப்பு” எனும் பகுதியையும் இங்கு காட்சிப்படுத்துகிறார் அதில் “மரிய தக்வாம்” உடைய பெரும்பான்மையான கவிதைகள் அடிக்கோடிட்டு காட்டப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

ஏனைய கவிதைப் பிரதிகள் போன்றல்லாது வித்தியாசமான இலகு மொழிநடையில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கும் நோர்வேஜிய கவிதைகள் வித்தியாசமான வடிவமைப்பு

திறனோடும் இங்கு காட்சிப்படுத்தப்படுகிறது.

தொடரில் “ஒரு பெண்ணின் பணி முடிவடைகிறது” என “மரிய தக்வாம்” எழுதிய கவிதைகளை காணக் கடியதாக இருந்தது அக்கவிதை “உயிர் நிழல் 22 ஜனவரி 2006” இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது.இங்கு சொல்லப்படும் கவிதைகள் படிக்கின்ற போது ஏதோ ஒரு மன அழுத்தத்தை கொடுப்பதை உணர முடிகிறது அது மட்டுமல்லாது தாய்மையின் கீற்றுகள் இங்கு கண்ணீர் வடிப்பது போன்றது ஒரு உணர்வைத் தருகிறது.

திருமணத்தின் ஊடாக தனது சர்வாங்கத்தை இழப்பதாகவும் அதை யாரோ ஆக்கிரமித்ததையும் இங்கு தெளிவாக சுட்டிக்காட்டுகிறார் சிறந்த மொழிபெயர்ப்பு திறனோடு நூலாசிரியர்.

ஒரு பெண்மைக்குள் இருக்கும் தாய்மையை அல்லது ஒரு பெண் படுகின்ற அவலங்களை சொல்கின்ற போது இங்கு “பசித்த உதடு களால் உறிஞ்சப்பட்டன முலைக்காம்புகள் கடுத்த புதுப்பற்களால் கடித்து கசிந்தன “ என்கிறார்.

இதில் இன்று உலகமே எதிர்கொள்கின்ற ஒரு மிகப்பெரும் சவாலின் உண்மை தன்மை பிரயோகிக்கப்படுகிறது அதாவது தான் பசியாக இருந்தாலும் தன் கைக்குழந்தைக்கு பாலூட்டுகின்ற தாய் படுகின்ற அவலங்கள் வரிகளில் சித்தரிக்கப்படுகிறது.

இங்கு “மரிய தக்வாமின்” கவிதைகள் போற்றப்படக்கூடியவை தான் இருப்பினும் அதன் மொழியாக்கம் இலகுவில் புரிந்து கொள்ளும் விதத்தில் மிக அழகாக செய்யப்பட்டிருப்பது இன்னும் போற்றப்படக்கூடியதே.

இதில் பெரும் பங்கு என்பது இலகு தமிழ்மொழிநடையில் மொழிபெயர்த்த பானு பாரதியை சார்ந்து நிற்கும் என்பதில் மாற்றுக் கருத்து இடம் கிடையாது.

தொடர்ந்து வாசிக்கின்ற போது 33 ஆம் பக்கம் “நொடிப்பொழுது” என்ற கவிதையும் அடுத்து “மீண்டும் ஒருமுறை” எனும் கவிதையும் “அருகருகாக” என்னும் கவிதையும் காணக் கடியதாக இருக்கிறது அதன் பின்னராக “1980” என்ற தலைப்போடு ஒரு கவிதை நகர்கிறது அதன் பின்னர் “தாயின் குரல்” என்று ஒலிக்கின்ற கவிதை “குளிருறைந்த தெளிவான நாள் ஒன்றில்” என்னும் கவிதைகளை ஊடறுத்து “மரிய தக்வாமின்” கவிதைகள் முடிவடைவதை காணலாம்.

இங்கு குறிப்பிடப்படுகின்ற “மரிய தக்வாமின்” ஏழு கவிதைகளும் பல்வேறு கோணங்களில் எழுதப்பட்ட வெவ்வேறு உணர்வுகளை உருவாக்கக்கூடிய கவிதைகளாக காண முடிகிறது இதன் மொழியாக்கம் என்பது மிக அலாதியானஎண்ணக்கருக்கலைஉருவாக்கும் விதத்தில் மிக சுவையாகவும் நேர்த்தியாகவும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

அந்த (நோர்வே) மொழியில் இந்த கவிதையை படித்தால் எவ்வளவு இனிமையாகவும் சுவையாகவும் வாசகர்களுக்கு இருக்குமோ அந்த அளவு இன்பத்தை தருகின்ற விதத்தில் இந்த மொழியாக்கம் அமைந்திருப்பது ஈழத்துப் பெண்ணாக இவளாலும் முடியும் என்ற சாத்தியத்தை உருவாக்குகிறது.

இதில் “தாயின் குரல்” எனும் கவிதை வரிகளில் கவிஞர் சிறிய அழகு கொண்ட மரக்கிளையில் உட்காரும் பறவையுடன் சம்பாசனை செய்வதையும் இறந்து போன தாயிடமிருந்து செய்தி வருகின்ற விடயத்தையும் சொல்வதாகவே அமைகிறது. தாய் மீது செய் கொண்ட அன்பையும் சேய் மீது தாய் கொண்டு கரிசனையையும் உணர்த்துகின்ற விதத்தில் அந்த கவிதை அமைந்திருப்பதை காணலாம்.

இப்படியாக தொடரும் நூலாசிரியர் “இங்கர் ஹாகரும்” என்ற கவிஞரையும் அறிமுகப்படுத்துகிறார் அவர் ஆணாதிக்கம் நிறைந்து இருந்தபோது பெண்ணின் வாதம் பேசிய அதற்காக குரல் கொடுக்க ஒருவராக அவரை அறிமுகப்படுத்தி பின்னர் அவர் எழுதிய “விடுதலை, பொறுமையற்ற

மனுவாய் இரு, என்னை இப்படித்தான் உனக்கு வேண்டும், அந்த கவிதை நான் தான், நான் தேடினேன், கார்த்திகையாள், பெண்ணாய் இருக்கப் பிறந்தவர்க்கு" என்ற தலைப்பிலான பல்வேறு நிலைப்பாட்டுடன் கூடிய கவிதைகளை அவரது எளிய முடி நடையில் மொழியாக்கம் செய்திருக்கிறார்.

அறுபதாம் பக்கம் அதன் முதல் பகுதியில் "பெண்ணாய் இருக்க பிறந்தவர்க்கு" என்ற கவிதையின் தொடர் பொண்ணினவாதம் பேசிக்கொண்டே ஆண்களை அடிமைகளாக அல்லது வேறு கோணத்தில் சித்தரித்து காட்டுகிறது அதில் "மெதுவாக மெதுவாக நாங்கள் கற்றுக் கொண்டோம் ஆண்கள் நாய்காவலர் போன்று எம்மை காவல் செய்வதனை நாங்கள் கண்டு கொண்டோம் - இந்த அறியாமைக்கும் அநீதிக்கும் உலகம் முழுமையும் ஆட்பட்டிருப்பதை நாங்கள் மெல்ல உணர்ந்து கொண்டோம்."

இதில் பெண் நிலைவாதிகளின் பொதுவான தன்மை உறுதி செய்யப்படுகிறது அது மட்டுமல்லாது ஆண்கள் அவர்களுக்கு அடிமைகள் போன்று எனும் கோஷத்தினையும் வெளிக்காட்டுகிறது. இதில் வெளிப்படையாகவே "ஆண்கள் நாய் காவலர்கள்" என்னும் மறை பொருளிலான பெண்நிலை வாதம் பேசப்படுவதை காண முடிகிறது இது ஒரு எளிதான ஊடுருவலாக இருந்தாலும் இதன் தாக்கம் என்பது ஆண்களின் நிர்வாகத்தின் கீழ் செழிமை பெறுகின்ற பெண்மையை தீப்பிழம்பாக மாறி எழவைக்கின்ற ஒரு செயலாகும்.

62 ஆவது பக்க தொடரிலிருந்து "வில்லி பிளாக்" என்கிற எழுத்தாளர் கவிஞர் சிறுகதை ஆசிரியர் நாவலாசிரியர் என பன்முக திறன் கொண்ட ஆளுமையை இனங்காட்டுகிறார் அவரது ஆறு கவிதை பிரதிகளும் மூன்று சிறுகதை தொகுப்புகளும் மூன்று நாவல்களும் இன்னும் பல ஆய்வு கட்டுரைகளும் வெளிவந்திருப்பதை வாசகர்களுக்கு நினைவு படுத்துகிறார்.

63 மற்றும் 64 ஆம் பக்கங்களில் "வலி" என்ற தலைப்போடு அவரது கவிதைகளை வாசகர்களுக்கு இலகுவாக ஓசையுடன் பிரஸ்தாபிக்கின்ற விதத்தில் பிரதியாக்கம் செய்திருக்கிறார் நூலாசிரியர்.

"வலி" என்ற தலைப்பிலான இரு கவிதைகளும் தன்னம்பிக்கை உணரும் விதத்திலும் விடயத்தை கூறாமல் வாசகர்களுக்கு விதவிதமான எண்ணக் கருவை ஏற்படுத்தும் விதத்தில் படிம முறையில் அந்த கவிதைகள் புனையப்பட்டிருக்கிறது இத்தனை கேள்விகளுக்கும் இறுதியாக வலியே பதிலாகிப் போவது கவி படைப்பதின் நுட்பத்தினை நன்கு உணர்த்துகிறது.

அடுத்ததாக 65 ஆம் பக்கம் "இஸ்டைன் மெஹரின்" எனும் நோர்வேஜிய எழுத்தாளர் கவிஞர் ஓவியர் நாவலாசிரியர் பாடல் ஆசிரியரை நூலாசிரியர் தெரிவு செய்கிறார் இவர் 30க்கும் மேற்பட்ட கவிதைப் பிரதிகளை வெளியிட்டு இருக்கிறார் அதில் முதலாவது பிரதி "அமைதியினூடு ஓரிரவு" என்பதை இங்கு ஞாபகம் மூட்டி அடுத்த பக்கத்தில் அவரது அருகாமையனும் சிறு கவிதை ஒன்றை தருகிறார்.

இக்கவிதை "நாம் இருவர் நமக்கொருவர்" என்கிற கோஷத்தை போன்று தனக்குள் உயிராகி தனக்குள் உறவாகி போகும் உறவுக்கு எழுதுவதைப் போன்று எழுதி இருப்பது யார் எவர் என்ற கேள்விகளோடு மீண்டும் மீண்டும் அக்கவிதையை படிக்கத் தூண்டுகிறது.

அடுத்ததாக நூலாசிரியர் அறுபத்தி ஏழாம் பக்கம் டென்மார்க்கை சேர்ந்த "இஞ்சிபோக் நெஸ்டாவிட்" எனும் படைப்பாளியை அறிமுகப்படுத்தி இயலாமை ஒரு படைப்பாளிக்கு தடையல்ல என்பதை உணர்த்தும் விதத்தில் சில அரிய தகவல்களை தருகிறார்.

அதில் குறித்த கவிஞர் தனது பத்தாவது வயதில் ஏற்பட்ட மூளை காய்ச்சல் நோய் காரணமாக தனது கேட்கும் திறனை இழந்து காது கேளாதோர் பாடசாலையில் கல்வி பயின்று பின்பு அதே பாடசாலையில் பணிபுரிந்து கவிஞர் உரைநடை ஆசிரியர் என பல பன்முகங்கள் கொண்டவராக மிளிர்கிறார்.

இவரது கவிதைகளில் "எனக்கொரு

பூச்சொண்டினை வழங்கி விடுங்கள்" என்ற கவிதை மிகப் பிரபல்யமானதாகவும் எல்லோராலும் பேசப்படக்கூடிய ஒன்றாக காணப்பட்டதாவும் பிற்காலங்களில் இக்கவிதை இசை சேர்க்கப்பட்டு காதுகளில் தேன்வார்க்கப்பட்டதையும் நூலில் உள்ள தகவல்களின்படி தெரிந்துகொள்ள கிடைக்கிறது.

அக்கவிதையே நூலாசிரியர் இங்கு நமக்காக தருகிறார். அதில் கவிஞர்
"நான் உயிர் வாழு ம்போதே
அன்பிற்காக ஏங்கும் என்
இதயத்திற்கு அதை கொடுத்து
விடுங்கள் ஏனெனில் மரணம்
என் கண்களை மூடிய பின் எனக்கு
வேண்டியது ஒன்றுமில்லை."

என்று தனக்கு அன்பு வேண்டுமென்ற செய்தியையும் அதை தன் மரணத்துக்கு முன் கொடுக்க வேண்டும் என்று கட்டளையாக கவிஞர் குறித்த நபரிடம் அல்லது வாசகரிடம் சொல்வதை அவதானிக்கலாம்.

அடுத்ததாக நூலாசிரியர் 69 ம் பக்கத்தில் "ஹேல்ஜி வெஸ்டர்ன்" என்னும் நோர்வேஜிய கவிஞர் ஒருவரை அறிமுகம் செய்கிறார் இவர் மொத்தமாக 14 கவிதை பிரதிகளை வெளியிட்டதாகவும்இவரதுகவிதைகள்சமூகம் சார்ந்த விமர்சனங்களை உள்ளடக்கியதாகவும் அமையும் என சொல்கிறான் அதற்கு சான்று பகரும் விதத்தில் தொடர்ந்து அவரது "காதலும் சுதந்திரமும்" எனும் கவிதையை மொழிப் பிரதி செய்து தருகிறார்.

இங்கு "நாம் ஒருவரை ஒருவர் தழுவியபடி எங்களது ஆன்மாக்களும் மிக அருகருகாக" எனும் வாசகம் ஏதோ ஒரு உணர்வு ரீதியான மாற்றத்தை உள்ளத்தில் உண்டு பண்ணுவதை உணர முடிகிறது.

தொடர்ந்து அவருடைய கவிதையாக "இறந்து போன ஒரு நண்பனுக்கு" "ஒரு கவிதை ஒரு பறவை" "ஒரு கோதுமை மணி அளவில் உண்மை" "நடுத்தீர்வை நாளில்" "இறுதி வார்த்தை" "உன்னத சங்கீதம் என்ற தலைப்புகளில் வாசகர்களுக்கு தந்திருக்கிறார்.

தொடர்ந்த எனது வாசிப்பு பணியில் குறைகள் இல்லாமல் நிறைகள் மற்றும் சொல்லப்பட்டு கொண்டே செல்கிறது என நீங்கள் எண்ணக்கூடும் அதற்கான விடையாக இவரது கவிதைகளை படிக்கின்ற போது அழகிய மொழிநடை தான் ஆனாலும் சில இடங்களில் வசனங்கள் தொய்வு நிலையிலேயே காணப்படுகிறது வசனம் அதிகமான இடங்களில் முடிக்கப்பட்ட பின்னர் மீண்டும் கவிதை தொடர்ந்து செல்லும் நிலையை காண்கிறோம்.

அதுமட்டுமல்லாது இந்த நூல் எவ்வளவு பிரயோசனப்படும் என எனக்கு தெரியவில்லை. ஆனால் இந்த நூல் ஒரு பாழடைந்த வீட்டை போல அல்லதுஇருள்நிறைந்தஇரவைப்போலவேகாட்சி தருகிறது இந்நூலை படிப்பவர்கள் ஒரு குறுகிய வட்டத்தில் உள்ளே சிக்கித் தவித்து பெண்நிலை வாதத்தை மட்டும் அரங்கேற்ற முடியும் அதனால் பிளவுகளும் பிரச்சனைகளும் கூடிக் கண்டே செல்லுமே தவிர ஒருபோதும் சுமுகமானதொரு சூழலை இங்கு காணவே முடியாது.

அடுத்து இது ஒரு தமிழ் மொழி பிரதியாக இருக்கிற படியினால் இங்கு பயன்படுத்தப்படுகின்ற அனைத்து வாசகங்களும் தமிழ் மொழியில் இருப்பது தான் சிறப்பு ஆனால் ஆங்காங்கே இங்கு ஆங்கில வார்த்தைகளும் காட்சிப்படுத்தப்படுகிறது இது சில நேரங்களில் தமிழ் மொழிக்கு செய்கின்ற துரோகமாகவே என்பார்வையில் தோணுகிறது.

மேலே பானுபாரதியை அறிமுகம் செய்கின்றபோது ஒரு முக்கியமான கருத்து சொல்லப்படுகிறது அதில் "ஈழத்துப் போர்க்காலங்களில் போரில் தன்னை அவர் முற்று முழு அர்ப்பணித்தவர்" என்கிறார் அப்படி ஈழத்தில் தனது விடுதலைக்காக வேண்டி போராடிய ஒருவர் இங்கு தன் உரிமையையே இழந்து அல்லது விட்டுக் கொடுத்து இருப்பது வேடிக்கையான ஒன்றாகவே காணப்படுகிறது.

"ஒற்றை வார்த்தையில் இதை விமர்சிப்பதாக இருந்தால் தமிழ் மீதும் தமிழர்கள் மீதும் தமிழர்களது பண்பாட்டு உணர்வுகள் மீதும்

நூலாசிரியர் பானுபாரதி அவர்களுக்கு துளி கூட அன்பு கருணை காருண்யம் பாசம் கிடையவே கிடையாது என்பதுதான்.”

இந்த துரோகத்தை அல்லது இந்த இருளை ஈடு செய்வதாக இருந்தால் ஈழத்து இலக்கியப் பரப்பில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய எத்தனையோ எழுத்தாளர்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எம்மில் பலர் மறைந்து விட்டார்கள். அப்படிப்பட்டவர்களது கவிதை பிரதிகளை காலத்தின் தேவையாக மிக அவசரமாக பானுபாரதி அவர்கள் வெளியீடு செய்து வைக்க வேண்டும்.

என் வாசிப்பு பணி மிக இலகுவாக முடிவெய்தியது ஆனாலும் எனது எழுத்து நீண்டு போய்விடக் கூடாது என்பதற்காக சில இடங்களில் கருத்துக்களை தாண்டி முப்பாய்சல் பாய்ந்து சிலவற்றை மட்டும் விவரித்து சொல்கிறேன் இன்னும் பல இடங்களில் கவிதைகளின் தலைப்புகளை மட்டும் சொல்லிக் கொண்டு முடிக்கிறேன்.

உண்மையில் பானுமதி அவர்கள் மிக மிக எளிமையான மொழிநடையில் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் சொற்கள் பிழை இன்றி வசன அமைப்புகள் இடை நடுவில் கருத்து மாற்றங்கள் இல்லாமல் மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார் என்று நூறு வீதம் உறுதியாக என்னால் சொல்லி கடந்து விட முடியாது.

இவர் ஒரு ஈழத்து பெண் என்பதை நினைவு கூறும் போதெல்லாம் மேனி சிலிர்த்து வியப்படைய கூடியதாகவே இருக்கிறது. இதில் மிக முக்கியமாக இந்த நிலை படிப்பதற்காக வேண்டியோ அல்லது கவிதைகளை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவோ அல்லது வேறு தேவைக்காக வேண்டியோ நூலாசரியர் நோர்வேஜிய மொழியை மிகத் துல்லியமாக கற்று இருப்பது வாசகனாக என்னை அதிக வியப்பில் ஆழ்த்துகிறது.

இந்த நூலை வாசகர்கள் ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டும் இதன் மொழியாக்கத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இதன் எளிமையான மொழி நடையை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். இக்கவிஞரை என்றும் போற்ற வேண்டும். அவருடைய கவிதைகளுக்கான அங்கீகாரத்தை கொடுக்க வேண்டும் என்று வேண்டியவனாக, பானுபாரதி இது தவிர இன்னும் பல மொழிகளிலான புத்தகங்களை அவர் மொழியாக்கம் செய்து சிறக்க வேண்டும் என்றும் பல்வேறு சிறந்த அடைவுகளை பெற வேண்டும் எனவும் பிரார்த்தனைகள் நல்கி விடைபெறுகிறேன்.

- இவன் கவிப்பொய்கை -
துணிந்தெழு சஞ்சிகை
ஆசிரியர் குழு உறுப்பினர்

தொகுப்பு
Razmi Razak
Welimada

உலக கிண்ணமும் இந்தியா அணியின் வெற்றியும்

2024 உலக கிண்ண இருபதுக்கு இருபது ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி அமெரிக்கா நாட்டில் கிரிக்கெட் வரலாற்றில் முதன் முதலாக இடம் பெற்றது அமெரிக்கா அணிக்கும் கனடா அணிக்கும் இடையிலனா போட்டியுடன் ஆரம்பிக்கபட்ட போட்டியில் அமெரிக்கா முதல் வெற்றியை பதிவு செய்து வரலாற்று சாதனை படைத்தது

இம்முறை உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் பல சுவார்ஸ்யமான சம்பவங்கள் பல இடம்பெற்றன. புதிதாக இணைந்த பல அணிகள்சில, பலபோட்டிகளில்பலம்வாய்ந்த அணிகளுடன் வெற்றி பெற்று கிரிக்கெட் ரசிகர்கள் பலரை வியப்புக்குள்ளாக்கியது.

அமெரிக்கா காலநிலை பல அணிகளின் வெற்றி தோல்வியை முடிவு செய்த சம்பவங்கள் பல இந்த முடிவுகளால் கிரிக்கெட் ரசிகர்கர்கள் பல எதிர்ப்புகளையும் மைதான களத்தடுப்பு சரியில்லை என்றும் தமது அதிதிருப்தியை வெளியிட்டனர்

எது எவ்வாராயினும் இறுதி போட்டியில் முதன் முறையாக உள் நுழைந்த சவுத் ஆப்பிரிக்கா அணி இந்தியா அணியை எதிர்கொண்டது. இந்த போட்டி இறுதி கட்டம் வரை விருவிருப்பாக சென்று இறுதியில் ரோஹித் சர்மா தலைமையிலான இந்தியா அணி வெற்றிகொண்டது. இந்த உலக கிண்ண போட்டியுடன் பல விளையாட்டு வீரர்கள் தமது ஓய்வை அறிவித்தார்கள்.

எது எப்படியோ இனி வரும் காலங்களில் அமெரிக்காவில் மட்டும் உலக கிண்ண போட்டி நடக்க கூடாது என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் ஆசை.

இக்கதையில் வரும் பெயர்கள், சம்பவங்கள், சூழ்நிலைகள் அனைத்தும் எழுத்தாளரின் கற்பனையே. இறந்தோர், இருப்போர் எவரையும் குறிப்பிடுவன அல்ல. சில இடங்கள், தெருக்கள் உண்மையானவையாகத் தோன்றினாலும், உண்மையில் அவற்றிற்கும் கதைக்குறிப்புக்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

இடம் :-சம்பு நகர்,
அம்பாறை மாவட்டம்
நேரம் :-காலை 6:30

சலீமின் செல்போனில் இருந்து 6:30 அலாரம் ஒலிக்கிறது. snooze செய்கிறான் சலீம். மீண்டும் 6:45 ஒலிக்க மீண்டும் snooze செய்கிறான் இவ்வாறே 7:30 வரைக்கும் அலாரம் அடிக்க எல்லா வற்றையும் பார்த்து கொண்டு இருந்த சல்மாவுக்கு பொருத்து கொள்ள முடியவில்லை கத்த ஆரம்பித்தாள்.

"டேய் சலீம் எழும்புடா வேலைக்கு போக டைம் ஆயிட்டு "
"ஆங் எழும்புரன்"
முனங்கிக் கொண்டே மீண்டும் படுத்தான்.

இவன் எழும்புவதாக தெரியவில்லை என உணர்ந்து கொண்ட சல்மா தனது இரு பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் வேலையில் மும்முரமானாள்.

சலீமின் குடும்பத்தில் அம்மா அப்பா உட்பட மொத்தமாக 7 பேர்கள் மூத்தவன் பெயர் அஸ்லம், ஊருக்குள் ஒரு பிரசித்திபெற்ற கொத்தனார். இரண்டாவது சல்மா ஹவுஸ் ஒய்ஃப். மூன்றாவது சலீம். நான்காவது அஹானா. கடைசியாக அயாஸ்.

சல்மாவுக்கு இரண்டு பிள்ளைகள் ஒரு பெண்ணும் ஒரு ஆணும். கணவன் துபாயில் வேலை பார்க்கிறார். மாதாந்த வருமானத்தில் ஒரு சிறிய பங்கை வைத்து கொண்டு சிக்கனமாக தனது பிள்ளைகளை வளர்த்து வாழ்ந்து வருகிறாள் சல்மா. கூடவே சலீமும் என்றுதான் சொல்ல வேண்டும். சல்மாவின் கணவன் வெளிநாடு சென்றவுடன் கடந்த இரண்டு வருடங்களாக சல்மாவின் வீட்டுக்கு பாதுகாப்பாகவும் துணையாக இருப்பதும் சலீம் தான் . அது ஒரு அளவான பழைய வீடு தான். வீட்டு ஓடுகள் மிகப் பழமையானவை. ஆங்காங்கே சில வெடித்த ஓடுகள் இருப்பதால் மழை பெய்யும் வேளைகளில் உடைந்த ஓடுகளில் இருந்து மழை நீர் வருவதுண்டு. உடைந்த ஓடுகள் மாற்றிவிட்டால் கொஞ்ச நாட்கள் கழித்து மீண்டும் ஓடுகள் உடைவதுண்டு. ஒவ்வொரு முறையும் ஓடு மாற்றுவது சலீம் தான். இவ்வாறிருக்க புதிய வீடு கட்டியே ஆக வேண்டும் என்று அவள் கணவன் வெளிநாடு செல்லும் போது திட்டவட்டமாக சொல்லிவிட்டாள். தனது அண்ணன் அஸ்லம் மூலமாக 12தூண்களும் நிறுவப்பட்டது .

வீடுகட்டிய பாதிவேளையில் நாட்டில் பல பிரச்சினைகள் வலம்வந்தன. அதிலும் குறிப்பாக பொருட்களின் விலை அதிகரிப்பு அவளை பெரிதாக தாக்கியது. அவளை மட்டுமா தாக்கியது?

‘எப்போதான் இந்த வீடுகட்டி முடியுமோ என்று பெருமூச்சு விட்டவாறே தனது தம்பி சலீம் தூங்கிய இடத்திற்கு சென்றாள். சலீம் எழுந்து தன் படுக்கையில் இருந்தவாறே செல்போனை பார்த்து கொண்டு இருந்தான்.

"நீ இண்டைக்கு வேளைக்கு போரதில்லையா சலீம் "

"இல்ல இண்டைக்கு டவுனுக்கு போகனும் "

"ஏன் "

"றிம்ஸான் மாமா நேத்து நைட்டு காசு தந்தாரு ட்ராவல் ஏஜன்ட் ஆபீஸ்கு போயிட்டு காச கட்டி பஸ்ஸ புக் பண்ணட்டாம் இனி நானும் கொஞ்சம் சாமான் வாங்கனும் அதான் இண்டைக்கு லீவ் போட்டன் "

"ஏ அத அவர் கட்டினா கட்டுப்படாதா?"
"நீ ஏன் அப்டி சொல்ற ட்ரிப் போற பஸ் செலவு மொத்தமா அவர்தான பார்க்கிறாரு நம்ம இப்படி சின்னச் சின்ன ஹெல்ப் பண்ணத்தான் வேனும் சிஸ்டர்"

" ம் சரி சரி போன் நோன்ட்டிட்டிருக்காம நீ போய் தண்ணி வாரு தண்ணி கட் பன்றதுக்குள்ள" கூறியவாறே சல்மா விராந்தையில் உள்ள படுக்கை விரிப்புகளை சரி செய்ய ஆரம்பித்தாள்.

சலீம் குடும்பத்தில் நடுத்தர பையன். பொதுவாகவே நடுத்தரம் என்பது ஒரு கடினமான விடயம் தான். எங்கேயும் எப்போதும் நடுநிலை பேணப்பட வேண்டும். தராசில் கூட நடுநிலை சரியாக இருந்தால் தான் அங்கே வலது இடது சரியாகிறது. இவனுக்கோ வலது இடது மட்டுமல்ல நாலா புரமும் பிரச்சினைகள் சூழ்வதும் அதை இவன் சரி செய்து கடந்து செல்வதும் வழமையான ஒன்று. கடந்து போவது தானே வாழ்க்கை.

குடும்ப சூழ்நிலை காரணமாக பள்ளிப் படிப்பை பாதியிலேயே விட்டுவிட்டு வேலை செய்தவாறே சில கோர்ஸ்களை முடித்தான். எதிர்பார்த்து செய்த ஒவ்வொரு காரியமும் அவனுக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது. அதன் பிறகு அண்ணன் அஸ்லமுடன் இணைந்து வேலை செய்ய ஆரம்பித்தான். கல்யாண வீடு, உறவினர்கள் வீடுகளுக்கு பெயின்டிங் செய்து வந்த சலீம் காலப் போக்கில் தனியாக பெயின்டிங் வேலை எடுத்து செய்தும் வந்தான்.

நாட்கள் வெருன்டோடின. இப்போது அவன் கீழ் சிலர் வேலை செய்கிறார்கள்.

காலைக் கடனை கச்சிதமாக முடித்து குளித்துவிட்டு வெளியே வந்தான் சலீம்.

சல்மா சமயலறையில் சமைத்துக்கொண்டு இருந்தாள். தாலிப்பு வாசனை அவன் பசியை தூண்டியது.
"என்ன சமைக்குற"
சமயலறைக்கு சென்றான் சலீம்.

"நூடுல்ஸ் செய்ரன் சாப்ட்டு போ"

"சரி" என்று தலையாட்டியவன் பக்கத்திலுள்ள பிரிட்ஜை திறந்தான்.

"பிரிட்ஜை ஏன்டா தொரக்குற அதுல ஒன்னுமில்ல போ உனக்கு கோல் வருது போய் பேசு"
"நேத்து பார்த்தேனே ஆப்பிள் இருந்திச்சு"

"அத பிள்ளயல் தின்னுட்டு

"அப்போ எனக்கு"

"அது உனக்கு வாங்கல"

"ம்ம் வர வர இந்த வூட்ல மதிப்பில்லாம போயிட்டிருக்கு பாப்பம்"

"ஸ்டோர் ரூம்ல தார் பேப்பர் இருக்கு அத எடுத்து ஒடஞ்ச ஓட்டுக்கு மேல போட்டுட்டு வா மதிப்பு மரியாத தாரேன் "

"அத நீயே வெச்சிட்டிரு " என்றவாறு விராந்தைக்கு சென்றான்.

சல்மா பிள்ளைகளுக்காக பழவகை, சாக்லேட் மற்றும் ஜூஸ் வகைகளை வாங்கி பிரிட்ஜில் வைப்பதை சலீம் சில நேரங்களில் பிரிட்ஜை திறந்து எடுத்து திண்பதுண்டு. இது பரவாயில்லை சில சமயங்களில் பிரிட்ஜில் எந்த வித உண்ணும் பொருட்கள் இருக்காது. அப்போதும் இவன் பிரிட்ஜை திறந்து மூடுவான். அதுதான் சல்மாவிற்கு கோவம்.

இரண்டாவது முறையாக சினுங்கிய செல்போனை காதருகில் உரச விட்டான்

"ஹலோ "
மறுமுனையில் அவன் வேலைக்கு அனுப்பிய ஆட்களில் ஒருவன்

"ஹலோ சலீம் நானா நாங்க இங்க வந்துட்டோம் என்ன செய்ய இண்டைக்கு"

"உள் வேல எல்லாத்தையும் முடிச்சிடுங்க பட்டி அடிக்கிறது இருந்தா அதையும் சேர்த்து ஆ.. வரும் போது அக்கா கிட்ட காசு 5000/- வாங்கிட்டு வா "ஓகே வா"

"ஓகே நானா"

தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

"டேய் சலீம் சாப்பாடு ஆறுது வா வந்து சாப்பிடு" வேகமாக அழைத்தாள் சல்மா.
"ம்ம் வர்ரேன்"

சாப்பிட்டு விட்டு தனது பைக்கில் ஏறி செல்ஃப் ஸ்டார்ட் பட்டணை அழுத்தினான். சலீம் வாங்கிய இரண்டாவது பைக் அது (ஹங்)

டவுனுக்கு போக இருந்தவனை வாசல் வழியாக செல்லும் போதே இடைமறித்தாள் சல்மா.

"நேத்து நியூஸ் ல சொன்னாங்கடா இண்டைக்கு மழை பெய்யுமாம் என்டு அந்த தார் பேப்பர எடுத்து ஒடைஞ்ச ஓட்டுக்கு மேல வைச்சு மறச்சி தந்திட்டு போயேன்"

" அடிக்கிற வெயில் மண்டைய பொழக்க பாக்குது இப்ப வந்திட்டு இத செய்ய சொல்ற"

" ஒரு கெழமயா நா சொல்லிட்டு வாரேன் நீயும் இப்போ அப்போனு இழுத்துட்டு இருக்க கொஞ்சம் செஞ்சி தந்திட்டு போடா"

" வந்து செய்ரன் பாக்கலாம் "

" சரி வரும் போது இறைச்சி அரைக்கிலோ வாங்கிட்டு வா "

"ஓகே சிஸ்டர் "

(Continue.....)

விடுதலை

அந்தி வானம் என்னை
அண்ணாந்து
பார்த்த போது
என் மனம் மேகமூட்டத்தில்
மிதந்துகொண்டிருந்தது.

நீலமும் சிவப்பும் கலந்த சாயம் வான்பரப்பில்
அங்குமிங்குமாய் வீசப்பட்டிருந்தன

காற்றை கிழித்துக்கொண்டு
காக்கைக்கூட்டங்கள்
இரை தேடிவிட்டு
இல்லம் சென்று கொண்டிருந்தன

நானோ பாயை விரித்து
கீழே அமர்ந்து
தென்றல் காற்றில் என்னை நானே
தாலாட்டிக்கொண்டு பேனாமையை
தடவத் துடங்கினேன்

விடுதியடியில்
பாவை நானோ பாவமல்லோ
என்னதான் செய்ய
விடுதலை வேண்டுமல்லோ!!!

2024.07.03
அஸ்கா அமீன்
ஆசிரியை
இ/கலபட தமிழ் வித்தியாலயம்

மனிதர்களின் முதல் எதிரியும் முடிவின்
எதிரியும் ஜாதிப்பெருமை.

இது ஒட்டிப்பிறந்த இரட்டையர் போல்.

அந்த உள்ளத்தின் ஆழத்தில் ஒட்டிக்
கிடக்கும் குப்பைகிடங்கு.

இறைவன் படைத்த மனிதர்கள் மட்டுமே
இனவெறி, பணவெறி, குலவெறி,
கோத்திரவெறி, ஜாதி வெறி பிடித்து நாயா
அலைகிறார்கள்.

படைத்தவனுக்கு சிலை செய்யும்
இப்படிப்பட்ட மனிதர்களின் கைகள்
சுத்தமில்லாத சாக்கடை.

சாஸ்திரம் பார்ப்பதும், கோத்திரம்
பார்ப்பதே இவர்கள் தொழில்.

நோயில் வீழ்ந்து, பாயில் படுத்தால்
அத்தனை பேருக்கும் ஆறடி நிலம் தான்
உலகில் கிடைக்கும் பரிசு.

அதுவும் இல்லாமல் ஹொரோனாவை
உற்பத்தி செய்து உலகெங்கும் மனித
உயிர்கள் அறுவடை செய்தக்காலத்தில்,
கட்டிப்பிடித்து அழ மனிதர் இல்லை.
தொட்டு தூக்கிட எவரும் அருகில்
இல்லை.
இந்த லட்சணத்தில் இவர்களுக்கு
உயர்ந்த ஜாதி, உயர் குல கோத்திரம்
தேவையாம் இப்போது.

ஜாதி வெறி பிடித்து தலைவிரித்தாடும்
பெரியவர்களுக்கு நாம் ஒன்று
சொல்லுகிறோம்.

உங்கள் பிள்ளைகள் 2நிமிட சிற்றின்பம்
பெற, தாசிகளையும், வேசிகளையும்
உருவாக்கி விட்டு, நல்லவர்கள் வேஷம்
போட்டு திரிவது உங்களுக்கு தெரியுமா?

குஞ்சம் கட்டிய வௌக்கமாறும்,
பஞ்சணையில் சுகம் தேடும் நீங்களும்
ஒன்று தான்.

அ. ராஜேஸ்வரி. நுவரெலியா.

என் கனவில் நீ இருந்தாய்
விழி திறந்து பார்த்தேன்
விடியலை தந்து விடை
பெற்றாய்
என் எண்ணப் படகை
விட்டுச் சென்று
வாழ்வின் கலங்கரை விளக்காய்
மாறினாய்
என் வாழ்வை வைரமாக ஜொலிக்க
வைத்தாய்
நான் செல்லும் திசைக்கு
என்றும் வழிகாட்டினாய்
வாழ்வோடு வந்தாய்
அவனது அழைப்பை ஏற்று
மண்ணோடு சென்றாய்
தொலைத்து விட்டு
ஏக்கத்தோடு வாழ்கிறேன்
என் வாழ்வில் இருந்து
நீ மறைந்து விட்டாய்
விழியோர ஈரம்
அதுவே என் இருப்பிடம்
என் ஆருயிரே
என் விழிகளின் நீர் துளிகள் அது என்றும்
மாறாது மறையாது

திருமதி. A.R.S.பௌஸியா இக்பால்
வரக்காமுறை

-ஒவ்வொரு கணப்பொழுதும்-

மனிதனாக பிறந்தது முதல் மரணிக்கும் வரை ஏதோ ஓர் உலக இலட்சியத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம்.ஆனால் நாம் இதற்கு பின்இருக்கும்வாழ்க்கையைமறந்துஇவ்வுலகஅற்ப சுகங்களில் பிண்ணி பிணைந்திருக்கின்றோம்.

நமது அன்றாட வாழ்க்கையானது வழமையாக சென்று கொண்டிருக்கும் போது ஏதோ ஓர் இடத்தில் மரணங்களை கேள நேரிடும்.அக்கணத்தில் மரணத்தின் பின்னரான வாழ்க்கையை சற்று நினைத்து பார்ப்போம். பின்னர் ஓரிரு நாட்களில் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பி விடுகிறோம்.

நமது அன்றாட நாம் அறிந்தும் அறியாமலும் ஒவ்வொரு கணப்பொழுதையும் உலக ஆசைகளுக்காக செலவழிக்கின்றோம்.மறுமை வாழ்வோ வெகு விரைவில் எம்மை அடைய காத்திருக்கிறது.

அல்லாஹ் திருக்குர்ஆனில் காலம் தொடர்பாக ஒரு அத்தியாயத்தையே அருளியுள்ளான். மேலும் அலி ரலி அவர்கள் கூறுகிறார்கள் "அற்ப விஷயங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவன் முக்கியமானவற்றை வீணாக்குகின்றான்".இப்னு கையிம் கூறுகிறார்கள் " நேரத்தை வீணடிப்பது மரணத்தை விட மோசமானது, ஏனென்றால் மரணம் உங்களை இந்த உலகத்திலிருந்து பிரிக்கின்றது, அதே நேரத்தில் நேரத்தை வீணடிப்பது உங்களை அல்லாஹ்விடமிருந்து பிரிக்கிறது ".

எனவே எமது பொன்னான நேரங்களை மறுமை வாழ்விற்கான ஆயத்தங்களை செய்யவும் இன்றிலிருந்தே தயாராகுவோம்.

நுபா பதுர்தீன்
கலாவெவ

மாற்றம் ஒன்றே மாறாதது
மானம் துட்சகமாக போகுது

போதைகள் இளைஞர்களை சூழ்குது
இளமை வீணாகப் போகுது

பணத்தின் புழக்கம் ஒரு புறமாகுது
அதனை இழக்கும் மனிதன் மறு புறமாகுறான்

அடுத்தவன் வாழ்வை கேடுத்து தன் வாழ்வை
அழகாக்கிறான்

போதைக்கு அடிமைப் பட்டவன் புதரைத்தேடி
பேதைகளை மோப்பம் பிடித்து பிஞ்சுகளையும்
சிதைக்கிறான்

விற்றவன் ஊரூருக்கு ஓர் வீடு வைத்து போதையை
வளர்க்கிறான்

போதைக்குப் பழக்கப்பட்டவன் புறம்
தள்ளப்படுகிறான்

புது உலகைத் தேடி புது விதமாக அலைகிறான்

இளமையின் கலையை இருளுக்குள்
புகுத்துகிறான்

யுவதிகளையும் இதற்குள் இழுக்குறானே

இன மத மொழி பால் வேறுபாடு இன்றி
போதைக்கு மயங்குகிறார்களே
மானத்தின் போர்வையை
விளக்கி

மாறிடு சமூகமே போதையை ஒழித்திடு என்றுமே

பானு ஜிப்ரி
சாய்ந்தமருது

காலமறியா காதலொன்று..

ஓராயிரம் காதல்கள் காலச்சக்கரத்தில் சுழல்ன்றாலும் அந்த ஒற்றை காதலே உயர்ந்து நிற்கிறது உலகில்..

"மேகலா உன்னை காதல் செய்கிறேன்.."

"ம்ஹூ இல்லை என் வாழ்வில் காதலிற்கு இடமில்லை என்னை மறந்து உம் காதலை துறந்து விடுங்கள்.."

திடமான பேதையவள் உள்ளத்தையும் காளைவயன் காதல் கலைத்தது என்னவோ உண்மை தான்..

ஆனாலும் அது பெண்மனமே ஏற்றுக்கொள்ள மறுத்து காதல் இல்லையென வாதாடியது..

ஆணவன் மேல் உணர்ந்த காதலை சொல்லி இருக்கலாம் அல்லவோ..

விதியின் விளையாட்டு..

துறவறத்தை எண்ணி தூரத்திலேயே தள்ளி வைத்து விட்டாள் கன்னியவள் காவியனின் காவிய காதலை..

காதலன் கண்களுக்கு கண்ணாமூச்சி காட்ட வேடமும் மாற்றிமைத்தாள்..

அன்றும் வழமையாய் அவளை தொடர்ந்த அவனுக்கு தெரிய வாய்ப்பில்லை காத்திருக்கும் காலனின் உருவம்..

பெண்ணவள் கை பற்றிய நொடி பிரிந்தது அவன் உயிர்..

காதலுடன் மண்ணிறங்கியது அவன் உடல்..

துடைத்து கொள் உன் கண்ணீரை..

உன் காதலை எதிப்பார்த்து காலகாலமாய் சுற்றிவந்த அவன் இல்லையடி இப்போது இவ்வுலகில்..

தோன்றிய காதலை இல்லையென்றாய்..இனி இருக்கிறது என வாதாட காதலுக்குரியவனும் இல்லை..

உதயாவின் உண்மைக்காதல் உதிரமாய் வேண்டாமென உதறிவளின் நெஞ்சில் உறைந்தே விட்டது..

அஸ்தமித்தது ஆத்மார்த்தமான காதலொன்று...

அப்ஷா ருமைஸ்
புத்தளம்

விடியல்

முதலடி பூமி மீது என்ன ரகம் என அறியா
வாழ்வதில்/
பருவங்கள் பல கடந்து எனை நானே அறியும்
திருப்பம் தனில்/
வாழ்க்கையின் நோக்கு தனை எடுத்தியம்ப
என் கல்லூரிக் கலையகமதில்/
இலக்கெனும் விடியலுக்கு உந்து சக்தியாய்
என் அன்னையவளின் இருப்பு/

இயல்பான வாழ்வில் இறைவனவனின்
விதியின் விளையாட்டு/
எனை மட்டும் விதிவிலக்காய்
விட்டுவிடவில்லை/
ஏற்றங்கள் யாவும் இறக்கங்கலாயின/
காலமும் அதற்குக் கைக்கொடுத்தாயிற்று/

கண்ணீரின் காதலியாய் எனை நானே
செதுக்கிட/
விதிமதியும் எனக்குத் துணை வராமலில்லை/
பெற்றோர்,உடன்பிறப்பு,நட்பு என அனைத்து
வட்டாரத்திற்குள்ளும்/
நான் தனிமையின் ரசிகையாகவே
மாறலானேன்/

விரக்தி,ஏக்கம்,வெறுமை,கையறுநிலை என
யாவும்/
எனையாளும் உணர்வுகளாய் மாற/
என்னோடிருந்த ஒற்றை எதிர்பார்ப்பு/
கல்விக்கடல் மீதான பயணமதே/

என் கல்விப் பந்தயக் களம் தனில்/
பல முகமூடிகளின் சந்திப்பு என்னில் நிகழ/
யாவும் நானறிந்தும் வெளிக்காட்டிட முடியாத
படி/
என் குருகுலத்தின் அக்கறை என்னில்
ஆற்றுப்படையாகிற்று/

சோதனைக்குப் பின் தான் உனக்கான
சாதனையென/
இறைவனவனின் விதியேட்டில்
எழுதப்பட்டிருப்பதை அறியாப் பேதையாய்
நானிருக்க/
வாழ்க்கையில் நொந்து போன நாழிகைகளை
எண்ணுகையில்/
இன்னுமவை என் விழிகளிலே துயர்க்
கோலமிடுகின்றன/

பல நாள் காத்திருப்பின் பின்னரான எனக்கான
அடையாளமது என்னில் வந்தமர/
என் அன்னையவளின் தாகம் தீர்த்த ஆத்ம
திருப்தி என்னுள்ளே/
கடந்த கடினங்கள் யாவும் மனக்கண்ணே
நிழலாட/
எனதான விடியலிற்காய் ஸுஜூதினிலே
என் நன்றி நவிலல் ,மாபெரும் எழுத்தாளன்
வசமானதே/

பேனா முனைக் காதலி
ஹாஸ்மியா தாஹா
கெக்கிராவ-கலாவெவ
(இ.தெ.ப.க.மாணவி)

தோழமையில் என்ன பயன்
காலத்துக்குக்காலம் மாறுமாயின்...........?

உறவுகள்தான் நமக்கெதற்கு
நமக்கு நல்லது நடக்கையில் மகிழ்ச்சி யடையயியலாத........?

நட்புறவுகள் தேவைதானா
சிரமமொன்றினில் அருகிருக்க யியலாத............?

பிணைப்புகள்தான் எதற்கு
எவ்வளவுதான் நெருக்கமாயிருந்தாலும்
உள்ளமதை நோகடிக்கின்ற........?

தனிமையை சிறப்பு என்பதா
அவசரத்துக்கெவரும்
இல்லாத.........?

உன் சொந்த நிழல்கூட உனைவிட்டு அகலும்
எப்புறமிருந்தும் உனக்கொளி கிடைக்கா
என அறிந்தவுடனே
இதில் மற்றவன் எம்மட்டு.......... ?

ஹொரொவ்பொத்தான.
அகமட் இம்தியாஸ்

நிறத்தால் வேறுபட்டு அன்பால் இணைந்தது //
நிழலுலகின் உன்னத நிஜம் மரணமற்ற மனிதநேயம் //

சீரிப்பாய்ந்த உவரியின் சீற்றத்தில் கண்டேன் //
பொங்கியெழுந்த மனிதம் எனும் மனிதநேயத்தை //
திக்கற்று திசையறியா தரணியெங்கும் ஓலமிட //
இல்லாநிலையில் இருந்ததை பகிர்வதில் கண்டேன் //

கட்டியணைத்த தாயுடன் சேயின் உயிரற்ற உடல்களும் //

தன் வாரிசு தலைக்கவே தோல்க்கொடுத்து //
உயிர்நீத்த தந்தையோ மரத்தை அரவணைத்து
மரணித்த அன்பிலும் கண்டேன் //
ஊரறியா உலகறியா மொழியற்ற உயிர்களுக்கும் //

வலிதாங்கி வழிகாட்டிய அன்பிலும் கண்டேன் //
பரிதவித்த பூவிதழ் சிந்திய புன்னகையிலும் கண்டேன் //

மனிதனுக்குள் இன்னும் மறையாது வாழ்ந்து கொண்டிருக்கும் //
இறப்பின்றிய மனிதம் எனும் புதினத்தை.

கவிக்குயில்
ஷியாஸ்னா பைஸல்
நாவலப்பிட்டி.



அன்புள்ள மகளுக்கு!

சிவப்பு நிற இரு கோடுகளின் முடிவால் முடிவானது புது உறவொன்றின் வருகை

ஆம் அது தான் உன் வருகை மகளே!

முதல் மூன்று மாத கால மசக்கை மயங்க அடுத்த மூன்று மாதங்களில் கொஞ்சம் நிறையும் கூடியது

அதுவரை ஓடியாடி நடந்த நான் பக்குவமாக நடக்க பழகிக் கொண்டேன்

முதன் முதலாக உன்னை இலத்திரனியல் திரையில் பார்த்த போது மெய்சிலிர்த்து போனேன்

உன் இதயத் துடிப்பை நான் கேட்க எவ்வளவு ஆவல் கொண்டேன் என்று தெரியுமா உனக்கு?

ஒவ்வொரு மாதமும் உன்னை பற்றி ஒவ்வொன்றாக தேடிப்பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவ்வப்போது இடுப்பு வலி, முதுகு வலி, வயிற்று வலி என்று எல்லாம் சேர்ந்து வாட்டி எடுக்கும் போது

உன்னை இன்னும் அதிகமாக தடவிக் கொண்டிருந்தேன் - உனக்கு வலித்திட கூடாதென்று!

உன்னை சுமப்பது சுகமான சுமை என்றானது எனக்கு

என்ன பிள்ளை என்று பலர் கேட்க
அப்போது தெரியவில்லை
மகளொன்று வரப்போகிறாள் என்று

நாள் கடந்து அதை தெரிந்து கொள்கையில் உண்மையில் பூரித்து தான் போனேன்

உனக்காக சின்னஞ்சிறு உடைகளை வாங்கி வரும்போது அதில் ஓர் அலாதிப் பிரியம் எனக்கு

இறுதி மூன்று மாதங்கள் வீங்கிய முகமும் தள்ளாடிய நடையும் என வரப்போகும் புதியவளை காணும் பேராவலுடனும் கொஞ்சம் பயத்துடனும் கழிந்து போனது

எப்படி இருப்பாள் அவள்
என் சாயலில் இருப்பாளா?

இல்லை அவள் தந்தை சாயலில் இருப்பாளா? இல்லை இருவரையும் போல் இருப்பாளா? என்ற பல கேள்விகள் என் மனதில்

என் மகளை காணப்போகும் அந்த நாளும் வந்தது

அது ஒரு ஜும்மா நாள்
அதிலும் குறிப்பாக நோன்புடைய நாள்

அதனாலோ என்னவோ எனக்கு சந்தோஷம் இரட்டிப்பானது

வீறிட்டு நீ அழும் போது மௌனமாக நான் அழுததை கண்டவர் யாரோ?

வார்த்தையில் சொல்ல முடியாத ஒருவித ஆனந்த கண்ணீர் அது

நீ என் அருகில் தூங்கிக் கொண்டிருந்தாய்
நானோ உறங்காமல் உன்னை இரசித்துக் கொண்டிருந்தேன்

உன்னை காண ஆவலுடன் உன் தந்தை ஓடோடி வந்ததை நீ அறிவாயா?

உன் தந்தை உன்னை ஆசையுடன் தூக்கி முத்தமிட்ட அக்கணம் மீண்டும் வராதா என்று மனம் கேட்கிறது

ஏனெனில் மீண்டும் திருப்பி பெறமுடியாத

வாழ்வின்
அழகான நொடி அது

நீ வந்த பிறகு எம் வாழ்க்கை இன்னும்
அழகானதை அறிவாயா மகளே?

உன் ஒவ்வொரு வளர்ச்சி கட்டத்தையும் ரசிக்கும்
முதல் ரசிகை நான்

என்றும் உனக்கான
இனிய பிராத்தனைகளுடன்
விடை பெறுகிறேன் அன்பு மகளே!

Noor Shahidha
Ummu Arafah

அனைவரின் கரத்திலும்
வாழ்க்கையை தொலைத்து விடக் கூடிய
கையடக்க தொலைபேசி உண்டு.
அதை தினம் தினம் உபயோகிக்கின்றோம்.
சிறந்த முறையில் பராமரித்து பயன்
படுத்துகின்றோம்.
அதற்கு ஏதாவதென்றால் உள்ளம் பதறிவிடும்
அளவிற்கு நம் வாழ்க்கையை அதனுள் புகுத்தி
வைத்திருக்கின்றோம்.
அதனோடு தான்
நாள் முழுவதும்...
இரவில் தூக்கமும்...
காலையில் விழிப்பும்...

கையடக்க தொலைபேசி இல்லை என்றால்
தொலைந்து விட்டோம் என்ற எண்ணம் பலரிடம்
இருக்கும்...
ஆனால் உண்மை எதுவெனில் நம் நிம்மதியை
தொலைத்து வாழ்கின்றோம் என்பது தான்
உண்மை நிலை...

கையடக்க தொலைபேசியை பயன்படுத்துவது
தவறு என்று கூறவில்லை.

அதை அளவு மீறி பயன்படுத்துவது...
நமக்கும் நம்மை சுற்றி உள்ளவர்களுக்கும் பல
வகையில் பாதிப்பாக அமைந்து விடுகிறது.
உடல் மற்றும் உள நோய்களுக்கு ஆளாவுவதாக
இருக்கலாம்.
கணவன் மனைவி இடையே இருக்கும் உறவு
பெற்றோர் பிள்ளைகள் இடையே இருக்கும் உறவு
சகோதர, சகோதரிகளுக்கு மத்தியில் இருக்கும்
உறவு இல்லாமல் செல்வதற்கும்
சொந்த பந்தங்களுக்கு மத்தியில் பிரச்சினை,

பிரிவுகள் வருவதற்கும் இது ஒரு முக்கிய இடம் வகிக்கிறது.

அனைத்திற்கும் மேலாக பாவங்களின் திறப்பாக
இது காணப்படுகிறது
என்பதை யாராலும் மறுக்க முடியாது.

மருந்தை நாம் அளவாக பயன்படுத்துவதை
போல் இதனையும் உபயோகிக்க வேண்டும்.

நல்ல விடயத்திற்காக பயன்படுத்தினாலும்
அளவோடு பயன்படுத்தும் போது
ஷைத்தானின் சூழ்ச்சியில் இருந்து நம்மை நாம்
பாதுகாத்துக் கொள்ள முடியும்.

ஏனெனில்
ஷைத்தான் அல்லாஹ்வுடன் இருக்கும்
தொடர்பை முறித்து பாவத்தில் வீழ்ந்து வழி
தவற வைக்க முயற்சி செய்வான்...
அதற்கு தகுந்தவாறு பாவமான காரியங்களை
அழகுபடுத்தி காட்டுவான்.

அதனுள் சிக்கி மனதை பாழ்படுத்தாமல்...
அதிகம் இறைவனை நினைவு கூர்ந்து மன
நிம்மதியோடு வாழ்வோம்.

பர்ஹா பிந்த் உஸ்மான்

தைரியம் மற்றும் துணிச்சல் சம்பந்தமான உளவியல் பார்வை

நமது சிந்தனைகள் எவ்வாறு இருக்குமோ அதற்கு ஏற்றாற்போல் தான் நமது தைரியம் மற்றும் துணிச்சலை வளர்த்துக் கொள்கின்றோம் .

வாழ்க்கையில் பெரிய முடிவுகளை எடுக்கும் போது துணிச்சலான சிந்தனையுடன் முடிவெடுப்பது அவசியமாகும்.

நம்மை நாமே தைரியப்படுத்துவதனால் மட்டுமே நமக்கு துணிச்சலாக எந்த ஒரு விடயத்தையும் கையாள முடிகின்றது.

நமது எதிர்காலத்தை நிர்ணயம் செய்வதற்கான சில விடயங்களையும் கூட சிறப்பான முறையில் அமைத்து கொள்ள நமது மனதில் ஆழமான ஒரு நம்பிக்கையும் மனோ தைரியமும் வேண்டும். இவை அமைந்தால் எளிதில் எதையும் சாதிக்கலாம்.

தன்னை தானே சீரமைத்துக் கொள்ளக்கூடிய அறிவாற்றலை இறைவன் மனிதனுக்கு மட்டுமே அளித்திருக்கும் வரமாகும். வீர தீர செயல் திட்டங்களிலும், அதிலே முடிவெடுப்பதிலும் மனதை உறுதியாக வைத்துக் கொள்வது அதாவது தைரியமாக இருப்பது சமூகத்தை முகங்கொடுப்பது என எல்லாவற்றிலும் தைரியத்துடன் முன்னெடுத்துச் செல்வது வெற்றிக்கான வாய்ப்பாக அமையும்.

ஷாதியா சம்சுதீன்
நாவலப்பிட்டிய

பேசும் பேனாக்கள்

நூல்கள் பற்றிய அறிமுகம்

துணிந்தெழு சஞ்சிகையில் "பேசும் பேனாக்கள்"பக்கத்தினூடாக சென்ற இதழில் சில நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டது. நூல்கள் பற்றிய அறிமுகங்களை துணிந்தெழு சஞ்சிகை வாசகர்களுக்கு மாதாந்த இதழ்களில் படைப்பாக்கமாக வெளியிடுவதன் நோக்கம் வாசகர்கள் நூல் பற்றிய அறிமுகங்களோடு தமது வாசிப்பு பயணத்தை தொடர வேண்டும் என்பதே.

இந்த மாத இதழில் அண்மையில் வெளியீடு செய்யப்பட்ட சில நூல்களை அறிமுகம் செய்கிறோம். அந்த நூல்கள் பல்வேறு துறை சார்ந்தவர்களால் வெளியீடு செய்யப்பட்டவை அவைகளின் பயன்பாடு என்னவோ மிக காத்திரமானவை நிச்சயம் வாசகர்களுக்கு இப்பகுதி மிகுந்த ஆர்வத்தை கொடுக்கும் என நம்புகிறோம்.

இப் பகுதிக்கு நீங்களும் உங்களுடைய அல்லது உங்களுடைய பகுதிகளில் வெளி வருகின்ற நூல்களை எமக்கு அனுப்பிவைத்தால் அந்த நூல்கள் பற்றிய அறிமுகங்களை துணிந்தெழு சஞ்சிகையின்"பேசும்பேனாக்கள்"பகுதியில் பிரசுரம் செய்ய முடியும். அது மட்டுமல்லாது விமர்சனங்கள் பகுதியினூடாக நூல் பற்றிய வாசிப்பு அனுபவத்தினையும் பிரசுரம் செய்யவுள்ளோம்.

அனுப்ப வேண்டிய முகவரி :-
துணிந்தெழு சஞ்சிகை பேசும் பேனாக்கள்,
எம்.ஜே. ஜவ்சன் அஹமட்,
148,வீசி, வீதி பெரியநீலாவணை - 02,
மருதமுனை.
0760200387,0754689820

***01.* நூல்**	**:- நிதர்சனத்தின் நிழல்**
நூலாசிரியர்	:- முபீதா அமீன் (அக்கரைப்பற்று)
வெளியீட்டகம்	:- ஏட்டுலா கனவாக்கம்
வெளியீடு	:- 01
வகை	:- கவிதை
பக்கங்கள்	:- 124
கவிதைகள்	:- 120
விலை	:- 500 ரூபாய்

சென்ற வாரம் வெளியீடு செய்யப்பட்ட "நிதர்சனத்தின் நிழல்" எனும் இந்நூல் அக்கரைப்பற்று "முபீதா அமீன்" அவர்களால் எழுதப்பட்ட கன்னி நூலாகும். இந்த நூலை வெளியீடு செய்த "ஏட்டுலா கனவாக்கம்" வெளியீட்டகம் கன்னி நூலாகவே இதனை வெளியீடு செய்கிறது.

அக்கரைப்பற்றில் வெகு விமர்சையாக வெளியீடு செய்த வைக்கப்பட்ட இந்த நூல் சமூக வலைத்தளங்களில் பல ஆளுமைகளால் வெகு விமர்சையாக பேசப்பட்டே வருகிறது

இந்த நூலில் மொத்தமாக 124 கவிதைகள் இடம் பெற்றுள்ளது. அத்தனை கவிதைகளும் நன்கு தேர்ச்சி பெற்ற எழுத்தாளரினால் அல்லது கவிஞர் ஒருவரினால் எழுதப்பட்டது போன்று காட்சியளிக்கிறது இதன் ஊடாக நூலாசிரியருக்கும் தமிழுக்கும் இடையிலான ஒற்றுமையும் மொழியில் அவர் பெற்றிருக்கும் புலமையும் நன்கு புலப்படுகிறது.

வாழ்க்கையில் நடைபெறும் சில நிதர்சனங்களை அழகாக வரிகளில் தெள்ளு தமிழில் கவி வடித்திருக்கிறார் நூலாசிரியர் இவர் இலை மறை காயாக இருந்து தனக்கான களத்திணை தேடி பல்வேறு ரீதியில் பல அவமானங்கள் புறக்கணிப்புகளுக்கு பின்னர் இந்நூலை பிரசவிக்கிறார்.

இந்நூல் பற்றிய தெளிவான விமர்சனத்தை எதிர் வருகின்ற துணிந்தெழு சஞ்சிகையின் இதழில் எதிர்பார்க்கலாம்.

வாசவர்களுக்கு இந்நூல் தேவைப்படுமிடத்து நூலாசிரியரை தொடர்பு கொண்டு தபாலில் பெற்றுக் கொள்ள முடியும்.

02. நூல் :- அப்பாவின் டயரி

நூலாசிரியர் :- ஹப்பார் (மருதமுனை)
வெளியீட்டகம் :-வெண்ணிலா பதிப்பகம்
வெளியீடு :- 01
வகை :- சிறுகதை
பக்கங்கள் :- 98
கதைகள் :- 15
விலை :- 500 ரூபாய்

மருதமுனையின் மூத்த எழுத்தாளர் கவிஞர் எனும் போர்வைக்குள் உள்வாங்கப்படும் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர், எழுத்தாளர், வெண்ணிலா காலாண்டு இதழின் பணிப்பாளர் எஸ். ஏ. ஹப்பார் எழுதிய இரண்டாவது நூல் இதுவாகும்.

"நிலவு அவள்" என்ற கவிதை பிரதிக்கு அடுத்ததாக "தமிழன் வார இதழ் பத்திரிகையில்" வெளிவந்த சிறுகதைகளை கோர்வையாக்கி தொகுத்து இங்கு "அப்பாவின் டயரி" எனும் தொகுதியாக சுமார் 15 சிறுகதைகளை உள்ளடங்கலாக வெளியீடு செய்திருக்கிறார்.

இந்த பிரதியில் இடம் பெற்றுள்ள சிறுகதைகள் பல்வேறு கோணங்களில் எழுதப்பட்டவையாகவும் சமூக சிந்தனை, விழிப்புணர்வு , அறிவு போன்ற எண்ணக் கருக்களை உள்ளடக்கியதாகுமே காணப்படுகிறது.
நிச்சயமாக வாசகர்கள் மத்தியில் நல்ல பல எண்ணக்கருக்களையும் சமூகத்தின் மீதான அக்கறைகளையும் இந்தப் பிரதி உருவாக்கும் என்பதில் வேறு கருத்துக்கு இடமில்லை என நம்புகிறேன்.

நூலாசிரியர் இங்கு கையாளுகின்ற மொழி நடை நிகழ்வுகள் கண்ணெதிரே தோன்றி மறைகின்ற விம்பத்தையும் பயன்படுத்துகின்ற சொற்றொடர்கள் இலேசான வாசிப்பு அணுகுமுறைக்கும் ஏற்ற விதத்திலும் இருப்பதனை ஒரு வாசகனாக என்னால் மிகத் தெளிவாக உணர முடிகிறது.

வாசகர்கள் இந்த நூலை இதில் உள்ள சிறுகதைகளை அவசியம் படிக்க வேண்டும். இந்த சிறுகதை நூலை நூலாசிரியர் இடத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

03. நூல் :- காணாமல் போன சில ஆண்டுகள்

நூலாசிரியர் :- எச்.எம்.பாறூக்
வெளியீட்டகம் :- தாயதி
வெளியீடு :- 12
வகை :- கவிதைகள்

பக்கங்கள் :- 112
கதைகள் :- 58
விலை :- 370 ரூபாய்

1970 ஆம் ஆண்டளவில் எழுதத்துவங்கி 80,90களில் கவித்துவ சிந்தனையால் எல்லோரது மனங்களிலும் நீங்காத இடம் பிடித்த முன்னோடிக் கவிஞரான எச். எம் பாறூக் ஓய்வு பெற்ற அதிபர் அவர்களால் 2023 ஆம் ஆண்டு 5ம் மாதம் 21ம் திகதி வெளியீடு செய்துவைக்கப்பட்ட நூலே இதுவாகும்.

2000ம் ஆண்டுகளுக்கு பிற்பாடு இவர் எழுத்துக்கள் மீது காட்டிய அலட்சியப் போக்கு அல்லது எழுத்துக்களை கொண்டாட முடியாத தன்மை சில காலங்கள் இவர் எழுத்துலகிலிருந்து காணாமல் போக காரணமாக அமைந்தது. அதன் பிற்பாடு "காணாமல் போன சில ஆண்டுகள்" எனும் குறித்த நூல் மூலம் மீண்டும் அறிமுகமாகிறார்.

கிழக்கில் பெயர் சொல்கின்ற அளவுக்கு வளர்ந்து உச்சம் தொட்ட கவிஞரது கவிதைகளை படிக்க கிடைத்தது வரப்பிரசாதம் என நினைக்கிறேன் அவருடைய கவிதைகளை படிக்கின்ற போது அவர் எழுத்துக்கள் மீது கொண்ட தனித்துவமான தன்மையும் எழுத்துக்களை அவர் நேசித்த விதமும் நன்கு புரிகிறது.

இந்நூலில் அவர் எழுத்துக்களை உபயோகிக்கின்ற முறை எம்மை ஆழ்ந்து யோசிக்க வைக்கிறது. சில நேரங்களில் அந்த எழுத்துக்களை ஏன் இவ்வளவு காலமும் கொண்டாடாமல் விட்டார்கள் என்ற கேள்வியும் எழுகிறது.

ஒரு கவிஞனது ஒரு நிமிடம் கூட காணாமல் போய்விட முடியாது அல்லது கூடாது ஆனால் இங்கு ஒரு கவிஞனது சில ஆண்டுகள் காணாமல் போய் உள்ளது அப்படி காணாமல் போன கவிஞனை வெளிக்கொண்டு வருவதில் பாரிய பங்களிப்பைச் செய்திருக்கிறார் "தில்லை" "தாயதி" அவர்கள் அவர் எடுத்துக்கொண்ட விடாப்பிடியான முயற்சியின் விளைவாகவே இந்த நூல் பிரசுரம் செய்யப்பட்டது.

இந்த நூலை கட்டாயம் வாசகர்கள் படிக்க வேண்டும் இதில் உள்ள கவிதைகளோடு அவர்கள் உறவாடி அக்கவிதைகளை புரிந்து கொள்ள வேண்டும் கவிதை பிரதிகள் தேவைப்படின் நூலாசிரியரை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தொகுப்பு :- ஜவ்சன் அஹமட் - மருதமுனை
துணிதெழு சஞ்சிகை ஆசிரியர் குழு

"மகள் நீங்க இப்பவே டொக்டர்ட போங்க இங்க பாருங்களே சின்னவன்ட மொகத்த "குழந்தையின் நெற்றியில் கை வைத்து பார்த்தவாறே ரமீனா உம்மா அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள்.

ரிப்காவுக்கும் மனசங்கடமும் கவலையுமாய் இருந்தது. மூன்று நாட்களாக சின்னவனுக்கு விட்டு விட்டு காய்ச்சல் அடித்துக் கொண்டிருந்தது.

"மாமி இன்டக்கி எப்படி சரி மருந்து எடுக்கனும். புள்ளைய பார்க்க மனசுக்கு கஷ்டம் மாமி."

அடுத்த ஊட்டு அரிபா மாமி ஆட்டோ எடுத்துட்டு வருவாங்க."

சொல்லும் போதே அரிபா வந்து விட்டாள்.

நேற்று முந்தநாள் எல்லாம் மூக்கிலும் கண்களிலும் நீர் ஒழுக கைகளை முஷ்டியாக்கி தேய்த்து அழுது கொண்டு இருந்த குழந்தை இன்று முகம் சிவக்க தாயின் தோளில் சாய்ந்து முனங்கிக் கொண்டிருந்தது.

கைப்பை, பணம் எல்லாம் தயார் பண்ணிக்கொடுத்த அவளது மாமியார் ரமீனா உம்மா "மகள் டீ ஊத்தி வெச்சேன். ரெண்டு பிஸ்கட்டோட டீயசரி குடிச்சிட்டு போங்க "கூறியவாறு குழந்தையை கைகளில் எடுத்துக் கொண்டாள்.

"என்ன ரமீனா தாத்தா புள்ளக்கி இன்னமும் கொணமில்லையா? எங்க மருந்து எடுத்தீங்க ".

மருந்து எடுக்க எங்கட ஊட்டுகாரர் உடவேயில்லையே

அரிபா கொதித்தாள் எங்கட மனுஷன் ட பாழாப்போன அட்வைஸ் கேட்டு இவரும் நாசம்.

இரிங்க இரிங்க புள்ளேள் கிட்ட இவர பத்தி நல்லா சொல்லனும்."

"ரிப்கா மகளும் ரெண்டு மூனு நாள் சப்புட்றதுமில்லை". ரிப்காவின் கணவனின் தயாரான ரமீனா உம்மா கவலைப் பட்டாள்.

அவசர அவசரமாக கிளம்பினார்கள்.

'இன்டக்கி என்ன சொன்னாலும் பரவாயில்லை. பச்ச புள்ளக்கி நோயில அவதிப்பட மருந்து எடுக்காம ஏலுமா? 'ரமீனா உம்மா தனக்குள் புலம்பி தவித்து கொண்டு இருந்தாள்.

வீட்டுக்காரர் இப்றாகீம் பயணம் ஒன்று போன நேரம் பார்த்து மருந்து எடுக்க அனுப்பி வைத்தாள். ரிப்காவின் கணவன் குழந்தை ஆகில் பிறந்து இரண்டு மாதங்களில் குழந்தையை விட்டு பிரிய மனமின்றி தான் பிழைப்புக்காக வெளிநாடு போனான்.

ஒவ்வொரு நாளும் வீடியோ கோல் எடுப்பான். குழந்தையுடன் கொஞ்சுவான்.

கடந்த இரண்டு நாட்களாக மருந்து எடுக்க சொல்கிறான்.

மாமியும் மருமகளும் தடுமாறிக் கொண்டு பொய்யும் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

இன்னும் இரண்டொரு நாட்களில் வருவதாகவும் கூறிக் கொண்டிருந்தான்.

படாத பாடு பட்டு வெளிநாடு போனவன் இப்போதே இந்த ஏழு மாசத்துலயே திரும்பி வந்தா போக்குவரத்து டிக்கெட் செலவு. ரிப்காவும் ரமீனா உம்மாவும் திணறித்தான் போனார்கள். இதை எல்லாம் சொல்லியும் இப்றாகீமுக்கு ஒன்றுமே விளங்கிய பாடில்லை.

வைத்தியசாலையில் டாக்டர் அப்துல் ரஹ்மான்.

பிரசித்தி பெற்ற குழந்தை நல மருத்துவர்.

ரிப்காவின் தூரத்து உறவினர். அவளது கணவன் ரிபாஸின் வகுப்பு தோழர்.

குழந்தையை நன்கு பரிசோதித்தார். நூற்றி ரெண்டுக்கு மேல காய்ச்சல் கொதித்து கொண்டிருந்தது.

"ஹைபீவர் என்னம்மா இப்படி காய்ச்சல் கூடுற வரைக்கும் மருந்து எடுத்தில்ல."கூறிய டாக்டர் உடனடியாக தாதியிடம் காய்ச்சல் மருந்து புகட்ட சொன்னார்.

நல்ல வேலை பிட் வரல்ல." தொடர்ந்து பேசிய டாக்டர் "என்ன சிஸ்டர், ரிபாஸ் போன வேல எப்படி . சொல்றேன்னு தவறா நினைக்காதீங்க. சல்லிய பத்தி யோசிக்காம புள்ளட நோய்க்கு மருந்தெடுக்க வந்திருக்கனும்"

ரிப்காவுக்கு கவலை கலந்த அவமானமாய் போய் விட்டது.

"இல்ல , இல்ல இவரு சல்லிஅனுப்பறய்தான். மாமா தான் மருந்து எடுக்க விடல்ல.இப்பஅவரு இல்லாத நேரத்தில தான் வந்தோம்"

_____

மறு நாள் மாலை நேரம் வைத்தியர் அப்துல் ரஹ்மான் இப்ராஹிம் வீட்டுக்கு வந்திருந்தார். ரிபாஸின் வகுப்பு தோழரான அவர் முன்பெல்லாம் பாடசாலை காலத்தில் அடிக்கடி வருபவன் தான். ரமீனா உம்மா ஆன்டியின் ஷோடீஈட்ஸ் சுவீட்ஸ் சாப்பாட்டுக்காக வருவார்கள்.

அதன் பின்னர் இந்த அப்துல் ரஹ்மானுக்கு வேலை கிடைத்தது, ரிபாஸின் திருமணத்திற்கு வந்திருந்துதான்

"அஸ்ஸலாமு அலைக்கும் அங்கள்"

கையடக்க தொலைபேசி யை பார்த்துக் கொண்டிருந்த இப்றாஹிம் , "வஅலைக்கும் ஸலாம்" வாங்க டொக்டர் மகன் ". சத்தம் கேட்டு ரமீனா உம்மாவும் வெளியே வந்தாள்.

ஆன்டி எப்படி எல்லாரும் சுகமா "

"அல்ஹம்துலில்லாஹ்! நல்லா இருக்கிறம்.

சின்னவன் ஆகிலுக்கும் இப்ப காச்சல் சலிவர்த்தம் எல்லாம் லேசாகிருச்சி மகன் "ரமீனா உம்மா நிம்மதி பெருமூச்சோடு சொன்னாள்.

"ஓ.ஓ புள்ளக்கி ரெண்டு மூனு நாள் காய்ச்சல் நோய் வந்தா எப்பவுமே இப்படித்தானே. பொறும வேணும். எப்படியும் கொணமாகிரும். அது வரையில கொஞ்சமா கைமருந்து எதாவது செய்ய வேண்டியது தான். இப்றாகீம் பிரசங்கம் செய்தார்.

"ம்கும் இவர பாருங்களே மகன்"

அப்துல் ரஹ்மான் லேசாக சிரித்துக்கொண்டார் ."நேத்து சின்னவன நல்ல நேரம் மருந்து க்கு கொண்டு வந்தீங்க. இன்னும் நாள் கடந்து .சலிக்கூடினா பிரச்சினயாவிரும்"

இப்ராஹிம் சட்டென அதிர்ந்தார்."அப்ப இந்த பச்ச புள்ளக்கி மருந்து குடுத்தீங்களா"ரமீனா உம்மாவை பார்த்து கேட்டார்.

"ஓ. புள்ள படற அவஸ்தய பாத்து உஹும்.... நானும் ரிப்காவும் பட்ட மனக்கஷ்டம், பாவம் ரிபாஸ் மகன் இன்னக்கி தான் சந்தோஷமா வீடியோ கோல் பேசினாரு.நேத்து முந்தைய நாள் எல்லாம் கவலையில இருந்தாரு. தூரதேசத்தில இருக்கிற புள்ள இன்னக்கி தான் எனக்கு நிம்மதி அல்ஹம்துலில்லாஹ் ”

ரமீனா உம்மா இரண்டு மூன்று நாட்களின் அவஸ்தயை கொட்டித் தீர்த்தாள்.

"அந்த காலத்தில எல்லாம் மருந்தா எடுத்தாங்க. "இப்றாகீம் சொன்னார்.

அப்துல் ரஹ்மான் லேசாக சிரித்தபடியே சொன்னார் "அந்த காலத்தில மருந்து இருக்கல்லியே அங்கள்"

மருந்து சைட் அபெக்ட ஆகுமே மகன்"

அங்கள் எல்லா மருந்தும் அப்படியில்ல அல்லாஹ்

நோய் படைச்சி மருந்தும் படைச்சி நோய் கண்டறிய டொக்டர்ஸையும் படைச்சி இருக்கிறான்."

இல்ல மகன் இயற்கையான முறையில குணமாக ஏலும் தானே"

ரமீனா உம்மாவுக்கு அலட்டல் கலந்த ஒரு கோபம் வந்தது.

"இங்க. பாருங்க! ஒங்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்து பைபாஸ் பண்ற நேரம் இத சொல்ல இருந்திச்சு.அதெல்லாம் பேசுமா உங்கட புத்தி அப்ப நல்லா தான் இருந்திச்சு."

அங்கள் சின்ன சின்ன நோய்க்கி உடனடியா மருந்து எடுக்க தேவை யில்ல தான் ஆனா பெரிய வர்த்தங்களுக்கு டொக்டர்ட போகனும்."

"இப்படி சொல்லி சொல்லியே பெரிய மாஃபியா நடக்கிறது டொக்டர் மவன்". இப்றாகீம் பெரிதாய் ஏதோ சமூக ஆய்வாளர் என்ற நினைப்பில் பேச அவரது வலது கையில் பிரிதொரு கையாய் திறன் பேசியிருந்தது.

இப்படி ஒவ்வொருத்தரும் கையில ஒரு போன வெச்சுகிட்டு இல்லாத பொல்லாத. விஷயங்கள மடத்தனமா யோசிச்சு கருத்து சொல்லி அதை சேயர் பன்றாங்க" டாக்டர் கூறி முடிக்க,

சரியா சொன்னீங்க மகன். மெடிகல் மாஃபியாவோ மண்ணங்கட்டியோ

அத சொல்லிக்கொண்டே இருந்தா சரியா நாங்க எங்கட புள்ள நோய்ல கஷ்டப் பட்ற நேரம் மருந்து எடுக்கனுமே. ரமீனா உம்மாவும் தன் பங்குக்கு சொன்னாள்.

மருத்துவத்த பத்தியோ மனிசர்ட உடம்ப நோய பத்தி எல்லாம் ஒன்டுமே தெரியாதவங்க சொல்லுறத நாங்க ஏன் கேக்கணும் நீங்க சொல்லுங்க மகன் ரமீனா உம்மா மீண்டும் உறுதியாக பேசினாள்.

"நீங்க சொல்றது சரி ஆன்டி அல்லாஹ்ட அற்புதம் மனிசன்.

உண்மையில அந்த அற்புதத்த கண்ணியப் படுத்தி தான் நாங்க டிரீட்மென்ட் செய்றோம். கொஞ்சம்யோசிச்சுபாருங்க சோறு, கறி மாமிசம் இன்னும் நிறைய சாப்பிடெல்லாம். நாங்க சாப்பிட்றோம். இதில எங்களுக்கு உடம்பில ஓடற இரத்தம் கிடைக்கிது . நாங்க இந்த சாப்பாடெல்லாம் ஒரு மெசின்ல போட்டு அரைச்சி எங்கட உடம்பு க்கு தேவையான ரத்தத்த .செய்ய ஏலுமா ஆன்டி. சின்ன ஒரு கிட்னிட வேலைய பென்னம் பெரிய மெசினுக்கு கொடுத்தா அது அந்த வேலைய அறுபது வீதமும் செய்றதில்ல. இதெல்லாம் யோசிச்சு பாருங்க." அப்துல் ரஹ்மான் கூறினார்.

"அது சரி மகன். படிச்ச டொக்டர்மார் இருக்கிற நேரம் சும்மா இந்த இன்டர்நெட் டொக்டர் மார்ட் அட்வைஸ் கேட்கிறது மடத்தனம்."ரமீனா உம்மா சற்று நிறுத்தி விட்டு மீண்டும் கூறத் தொடங்கினாள்.

"இப்ப பாருங்க பர்ளான ரமழான் நோன்பு.அப்ப ப்ரங்னன்ட உம்மா மார், பாலூட்டற உம்மாமார், வயசாலிகள், நோயாளிகள் எப்படி நோன்பு பிடிக்கனும். அதுல அவங்கட ஆரோக்கியம் பத்தி எல்லாம் நாங்க மார்க்கம் தெரிஞ்ச மருத்துவம் தெரிஞ்ச சமூக விஞ்ஞானம் தெரிஞ்ச ஒரு டொக்டர்ட தானே கேக்கணும். இத தானே மார்க்கமும் சொல்லுது. "கூறி விட்டு கணவன் இப்றாகீமின் முகத்தை பார்த்தாள். இதுதான் இவருக்கு சொல்ல சரியான நேரம் என எண்ணிக் கொண்டாள்.

"நீங்க சொல்றது சரி ஆன்டி குர்ஆன்ட விளக்கம் ஹதீஸ்ட விளக்கம் தெரிஞ்ச சமூக விஞ்ஞானம் பத்தி நல்லா தெரிஞ்ச எங்கட டொக்டர்ஸ் நிறைய பேர் சமூகத்தில் இருக்கிறாங்க. அவங்கட எட்வைஸ் கேக்க ஏலுமே".

இப்றாகீம் எதுவுமே பேசவில்லை. ஆனால் அவர் எதையும் ஒத்துக்கொள்ளாத மனதோடு பேச ஆதாரம் தேடி தடுமாறிக் கொண்டு இருப்பதை அவரது முகப்பாவம் காட்டியது.

உள்ளே போன ரமீனா உம்மா பெட்டீஸ் நிறைந்த தட்டுடனும் மருமகள் ரிப்கா தயாரித்த தேனீர் உடனும் வந்தாள்.

ரமீனா உம்மாவின் இந்த பெட்டீஸுக்காக பாடசாலை

நாட்களிலேயே நண்பர்கள் சகிதம் இங்கு வருகை தருவது நினைவு க்கு வந்தது.

"எடுங்க மகன் ." அவள் பரிமாறினாள்.

இன்னமும் இப்றாஹிமினின் முகத்தில் மாற்றம் வராதது கண்டு பேச்சு தொடர்ந்துக்கொண்டிருந்தது.

"அங்கள் உங்கட கையில கால்ல இருக்கிற தழும்பு, மார்க் எல்லாம் பாருங்க. எப்பயாவது இதப்பத்தி யோசிச்சீங்களா"டாக்டர் அப்துல் ரஹ்மான் கேட்க

இப்றாகீம் எதுவுமே புரியாமல் அவரை நோக்கினார்.

அப்துல் ரஹ்மான் தொடர்ந்து பேசினார்.

"எங்கட ஹார்ட் பைப் பாஸ் சேர்ஜரிக்கு நரம்பு தேவ படற நேரம் சிலிக்கான் இல்லாட்டி பிளாஸ்டிக் நரம்பு மார்க்கட்ல் வாங்கல்ல. உஹூம்.....சுப்ஹானல்லாஹ் அல்லாஹ் அற்புதமானவன்.

ஒங்க உடம்புல உள்ள உங்கட கையில கால்ல உள்ள நரம்ப தான் டொக்டர்ஸ் எடுத்தாங்க. அத எடுத்ததால ஒங்கட கை கால் வேல செய்யாம இருக்கா. இல்லையே எல்லாமே நல்லாதான் இருக்கு. இப்ப யோசிச்சு பாருங்க. இது எக்ஸ்ட்றா நரம்பு. இதெல்லாம் அல்லாஹ்ட ஏற்பாடு. இந்த நோய்வல் டொக்டர்ஸ் மருந்து ட்ரீட்மென்ட் எல்லாம் அல்லாஹ்ட ஏற்பாடு.

அல்லாஹ்ட மேல் தவக்குல் வைத்து நாங்க இத ஏற்றுக் கொள்றோம்.

அவ்வளவு தான் அங்கிள்.

" ஆகில் போய் ஆகில் ஓடாதிங்கடா செல்லம்." ரிப்காவின் சப்தம் வர ஏக காலத்திலே வோர்கரில் இருந்து ஒரு கையால் பற்றிப் பிடித்துக்கொண்டு மறுகையால் தன் தலையில் தொப்பி போல் கவிழ்த்த பட்ட தனது உணவு பாத்திரத்தை பிடித்தப்படி காலூண்டி வந்தான். தலைவழியே முகத்திலும் உடம்பிலும் அவனது உணவு வழிந்தது. அனைவரும் சிரிக்க அவனும் தேங்காய் பூப்போல அரைகுறையாய் இருந்த நான்கு பற்களையும் காட்டி சிரித்தான்.

நோயிலிருந்து மீண்டு வந்த சின்னவனின் ஆரோக்கிய புன்னகை இப்றாஹிமின் மனதில் ஏதோ மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்து.

....

அஸ்மா தீன்
கம்பளை

இம்மாத ஆளுமை

கிழக்கிலங்கையின் சம்மாந்துறையை பிறப்பிடமாகவும் தற்போது மருதமுனையை வசிப்பிடமாகவும் கொண்டவர் சித்தி மஷூறா சுஹூறுத்தீன். 1979 இல் மஷூறா ஏ மஜீத் என்ற பெயரில் வானொலியில் எழுத ஆரம்பித்து இலங்கையின் தேசிய பத்திரிகைகள் அனைத்திலும் பல சஞ்சிகைகளிலும் எழுதியவர். கவிதை, சிறுகதை கட்டுரை, நாடகம், பாடல், வில்லுப் பாடல், பிறைப்பாடல், தாளலயம், பேச்சு, சித்திரம், கைப்பணி, சஞ்சிகை என பல்துறைகளிலும் தடம் பதித்தவர்.

மாவடிப்பள்ளி கமு/ அஷ்ரப் மகா வித்தியாலத்தில் ஆசிரியையாக பணியாற்றி அண்மையில் ஓய்வ பெற்றுள்ளார். இவர் மொழி தேர்ச்சியிலும் படைப்பாக்க திறனிலும் மாணவர்களை சிறந்த அடைவைப் பெறச் செய்தவர்.

2017இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய 'கலைஞர் சுவதம்' விருது உட்பட இலக்கியத்திற்காக 13 விருதுகள் பெற்றிருக்கின்றார். 2021 இல் நதிகளின் தேசிய கீதம் எனும் இவரது சுய கவிதை தொகுதியும் வெளிவந்துள்ளது. அது தவிர Srilanka Pen Club வெளியீடாக 63 முஸ்லிம் பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய சுட்டு விரல் கவிதைத் தொகுதியை 2021 ல் தொகுத்து தந்திருக்கிறார். இது இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண் கவிஞர்களின் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது. கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபீ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த SLPC உறுப்பினர்கள் இருபத்து இரண்டுபேரின் கவிதைகளை இமயம் தழுவும் இறக்கைகள் என்ற பெயரில் தொகுதியாக்கி தந்திருக்கிறார்..இலங்கையின் முதலாவது மொழி பெயர்ப்புக் கவிதை தொகுதி அல்லது பெண்களின் மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுதி இதுவாகும் என நினைக்கிறேன். தவிர SLPC அமைப்பின் அங்கத்தவர்களில் பதினாறு பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து உலகம் முழுதும் எங்கள் கதைகள். என்ற சிறுகதைத் தொகுதியையும் வழங்கியிருக்கிறார். இதுவே முஸ்லிம் பெண்களின் முதலாவது சிறுகதைத் தொகுதியாகும். எண்பதின் ஆரம்பத்திலிருந்து முப்பதுக்கும் மேற்பட்ட சஞ்சிகைகள், வெளியிட்டுள்ளார்.

2021ம் ஆண்டு முஸ்லிம் பெண் கவிஞர்களை இணைத்து Srilanka Pen club என்ற ஆற்றலுள்ள முஸ்லிம் பெண்களின் அமைப்பை ஸ்தாபித்தார். இதோ இவருடனான செவ்வி...

கவிஞர், எழுத்தாளர், பாடலாசிரியர் ஓவியர் பத்திரிகையாளர் நாடக ஆசிரியர் கைப்பணியாளர் பேச்சாளர் என பன்முக திறமைகளை கொண்ட உங்களின் இலக்கிய பிரவேசத்தை பற்றி அறிய ஆவலாக உள்ளோம்.

வாசிப்பு பழக்கம்தான் என்னை எழுத்துலகிற்கு இட்டுச் சென்றது. எங்கள் வீட்டிலே தாய்க்கு வேறாகவும் தந்தைக்கு வேறாகவும் புத்தகப் பெட்டிகளிருக்கும்.இருவரிடமும் ஒரே வகைப் புத்தகங்கள்கூட இருக்கும். பெண்புத்தி மாலை, மஹ்சூக் மாலை, மும்மணி மாலை, ஞானமணிமாலை, மகிழ் மணிமாலை, சலவாத்துமாலை, வெள்ளாட்டி மஸ்அலா, ஸைத்தூன் கிஸ்ஸா தமீமுல் அன்சாரியின் கிஸ்ஸா, காசீம் படைப்போர் மரணவிளக்கம், குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், அகத்தியர் அருளிய ஆயுர்வேதம், தலைப்பாத்திஹா... இப்படியெல்லாம் மிக சிறுவயதிலிருந்தே திருட்டுத்தனமாக வாசித்தேன். வீட்டிலே இரண்டு மூன்று தினசரிகள் வாங்குவார்கள். மித்திரனை திருட்டுத் தனமாகவே வாசிப்பேன். அகத்தியர் அருளிய ஆயுர்வேதம் செய்யுள்வடிவ மருத்துவ நூல். நான்காம் வகுப்புவரை மட்டுமே படித்த தந்தை எப்படி இதனை விளங்கி வைத்தியம் செய்தாரென்பது எனக்கு இதுவரை புரியாத புதிர்தான்.தெருவில் குப்பைகளில் கிடக்கும் தாள்களைக்கூட பொறுக்கி வாசிக்கும் பழக்கம் என்னிடமிருந்தது.வாசிப்புதான் என்னை எழுத்துலகிற்கு அழைத்து வந்தது.

அந்நாட்களில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து இலக்கியவானில் தடம்பதித்த உங்கள் அனுபவங்களை எமது வாசகர்களுக்காக பகிர்ந்து கொள்வீர்களா?

இன்று போல் அன்று பெண்களுக்கு சுயமாக இயங்குவதென்பது மிக சவாலான விடயம்.ஆண் கவிஞர்களின் அறிமுகம்கூட சமூகத்தில் வித்தியாசமாகவே நோக்கப்படும் சந்தர்ப்பமிருந்தது.தவிர எழுத அனுமதித்தால் படிப்பு பாழாகிவிடும் என்ற தவறான மனப்பாங்கும் இருந்து வந்தது.எழுத்துப் பிரவேசம் படிப்பிற்கு தடையில்லை என்பதை எனது பெற்றோருக்கு எடுத்து சொல்லி எனக்கு வழிகோலியவர் அமரர் வீ ஆனந்தன்.

பத்திரிகைகளில் ஆக்கங்கள் பார்த்து பெயரறிந்து கொண்டு தன்னை எழுத்தாளர் என அறிமுகம் செய்து கொண்டு திடீரென யாராவது கவிஞர் வந்து நிற்பார். அஃதே பெரிய சவாலாயிருந்தது. எழுதுவதோடு சஞ்சிகையும் வெளியிட்டுக் கொண்டிருந்தேன்.காலாண்டு சஞ்சிகையாக, நிறைமதி என்ற பெயரில் கையெழுத்து சஞ்சிகையாக தொடங்கி, ரோணியோவில் இருபத்து இரண்டாவது இதழோடு முடிவுற்றது.

கைபேசி தொலைபேசி இல்லாக்காலத்திலும், தொடர்பாடல்களில் குறையிருக்கவில்லை. கையெழுத்துப் பிரதி ஊர் ஊராக சுற்றி மீண்டும் கைக்கு வந்து சேரும். வாசகர் கருத்துக்களுக்காகவே, பின்புறம் எழுதுவதற்கு தாள்கள் விடப்பட்டிருக்கும்.மறக்க முடியாத என்னைப் புடம்போட்ட அனுபவங்கள் அவை.

படைப்புகள் காலத்தின் கண்ணாடி என்பதற்கமைய உங்கள் படைப்புகள் ஏதாவது சமூக மாற்றத்தை நோக்கி உள்ளனவா.ஒரு பேனாவினால் சரித்திரத்தை மாற்ற முடியும் என்பார்கள்.இன்றைய காலத்தில் இவற்றை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

மாற்றம் ஒன்றே மாறாதது. எழுத ஆரம்பித்தபோது எனக்கு எந்த இலக்குகளும் இருக்கவில்லைத்தான். ஆற்றலை வளர்த்துக்

கொண்டதும், என் எழுத்திற்குரிய இலக்கினைத் தீர்மானித்துக் கொண்டேன். சமூகத்தில் அனைத்து வகையிலும் இன்னலுறும் பெண்களுக்காக, குரல் கொடுப்பதென்றும் பெண்களுக்கு அவர்களை அவர்களே உணரச் செய்வதும் என் எழுத்தின் பிரதான நோக்கமாக வரையறை செய்து கொண்டேன். என் தனியொருத்தியின் பேனாவால் பாரிய மாற்றத்தை நிகழ்த்திவிட முடியாது என்பதை இனம் கண்டபின்பே பெண்களை ஒருங்கிணைத்து பெண்களுக்காக நகர்வதென தீர்மானித்தேன். என்னுடைய எவ்வகை படைப்புகளாகட்டும். எதை நீங்கள் வாசித்தாலும், பெண்களின் பிரச்சினைகள் பற்றிப் பின்னப்பட்டிருப்பதைக் காணலாம்.

இலக்கிய உலகில் தனக்கென ஓர் இடத்தை தக்க வைத்துள்ள நீங்கள் Srilanka pen club என்ற whatsapp அமைப்பை ஆரம்பிக்க காரணம் யாது?

ஆற்றலுள்ள பெண்கள் அனேகம்பேர் வீட்டிலே முடங்கிக் கிடக்கின்றனர். ஒரு பெண்ணுக்கு கல்வியிருந்தால், அந்த குடும்பமே சிறப்பாக விளங்கும். பல பெண்களுக்கு, தமது ஆற்றல்களை வெளிப்படுத்தும் வழிகளும் தெரியாது. இதுவரை காலமும் பல பெண் எழுத்தாளர்களின் சாரதிகளாக ஆண் எழுத்தாளர்கள் சிலர் தான் இருந்து வந்திருக்கின்றனர். பெண்களின் ஆற்றல்கள் சுயமிழந்த நிலைதான். கலங்கரை விளக்கமில்லாமல் விமானங்கள் முட்டிக் கொண்டு சாய்கின்ற சமாச்சாரங்களும் பெண்களுக்கு நடந்திருக்கிறது. srilanka pen club ஐ ஒரு கலங்கரை விளக்கமாகவே ஆரம்பித்தேன். இன்று இந்த அமைப்பே, என் குடும்பமாகி விட்டது.

Srilanka pen club இன் ஸ்தாபகராக உள்ள நீங்கள் அதன் ஆரம்பம் பற்றியும் அங்கத்தவர்கள் பற்றியும் கூற முடியுமா?

நிச்சயமாக .1980 களின் முற்பகுதியில்தான், இந்தப் பெயரில் ஆரம்பித்தேன்.படிக்கிற காலம்.ஆனால் டிஜிட்டல் காலமில்லை. பென்கிளப் கனவினை என்னுள் விதைத்தவர் என்னன்புக்குரிய வீ. ஆனந்தன் அண்ணாச்சி. இது என் நீண்டகாலக் கனவு. செயற்படுத்துவதில்தான் பல தாமதங்கள். சவால்கள். கொரோனாக் காலத்தில் பாடசாலை லீவு நல்ல சந்தர்ப்பமாய் அமைந்தது. டிஜிட்டல் தொழினுட்பம் சாதகமாய் அமையுமே என்ற ஞானோதயம் ஏற்பட்டது. முதலில் தோழிகளை இணைத்துக் கொண்டேன். முதலில் ஹுனுப்பிட்டி கமர்ஜான் பீபீ. அடுத்து திருமலை மர்ளியா சக்காப். இருவருமே இதுவரை எனது வலது கரங்களாக ஊக்குவித்துக் கொண்டேயிருக்கின்றனர். என்பது மேலதிக தகவல். என்னால் முடியுமென்ற நம்பிக்கையை என்னுள் விதைத்துக் கொண்டிருப்பவர்கள் அவர்கள். பின்னரும் சிலர் இவ்வாறு இயைந்து போகின்றனர். அனைவர் பெயரையும் சொல்வதில் விடுபடுபவர்களுக்கு சங்கடமேற்படலாம்.

தோழிகளை இணைத்துக் கொண்டபின் முகநூலில் எழுதும் பெண் எழுத்தாளர்களை பெண்தான் என உறுதிப்படுத்திய பின் இணைத்துக் கொண்டேன். அதுபெரும் சவால்.

உண்மையில் பெண்களின் கவிதைகளை தொகுக்கும் நோக்குடனேயே இணைத்துக் கொண்டேன். தொகுதியை ஒரு அமைப்பின் பெயரால் வெளியிடுவது சிறப்பு என யோசித்தேன். Srilanka pen club விழித்துக் கொண்டது.
இன்று நாடு முழுவதும் இந்த அமைப்பிற்குள் அகமகிழ்கிறது. ஆற்றல்களை வளர்ப்பது என்பதற்கு அப்பால் அன்புதான்

செழித்தோங்கியிருக்கிறது. நட்பில் திளைத்து அழுக்காறுகள் அகற்றி ஒரே குடும்பமாக நேசத்தில் கட்டுண்டு கிடக்கிறோம். பொறாமை என்ற ஒன்று இங்கு செயலிழந்திருப்பதுதான் பெரு வெற்றியாக களிக்கிறேன். மனசில் விகற்பமின்றி ஆளையாள் பாராட்டுவதில் போட்டியிடுகிறார்களே. இது என்ன விந்தை! எந்த மந்திரம் நம்மை அன்பில் கட்டிப்போட்டது. ஒருத்தருக்கொருத்தர் உதவிக்கரம் நீட்ட அனைவரும் தயார் நிலையிலிருக்கிறார்களே. இறைவனின் திருப்பொருத்தமிருக்கிறது.

நம்மவர்கள் தமதாற்றல்களை அள்ளிக் கொட்டுகிறார்களே.எந்த விடயத்திலும் அபாரமானதிறமைகளைகாணக்கிடைக்கிறதே. காணுந்தோறும் ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தாயின் மனநிலையில் புளகாங்கிக்கிறேன். மாஷா அல்லாஹ் பெண்களுக்கான எனது கனவுகளுக்கு, இவர்கள் நிச்சயம் உயிர்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை நிறையவே உண்டு.

முஸ்லிம் பெண் இலக்கியவாதிகளுக்கு களமாக அமைந்துள்ள srilanka pen club இன் தற்போதைய செயல்திட்டங்கள் வளர்ச்சி பற்றி அறிய ஆவலாக உள்ளோம். தற்போது நூல் வெளியீடுகளிலேயே கவனம் தங்கியிருக்கிறது.

ஒரு எழுத்தாளனின் இருத்தலென்பது அவனது வெளியீடுகளிலேயே தங்கியுள்ளது.அவன் இறந்த பின்பும் அவனது பெயர் நிலைத்திருக்க வெளியீடுகள் தேவை.பிற்கால சந்ததியினர் இவ்வாறான ஒரு எழுத்தாளர் வாழ்ந்தார் என்ற வரலாற்றை அறியவும் வேண்டும்.அந்த சந்தர்ப்பம் நமது பெண்களுக்கும் கிடைக்க வேண்டுமென அவாவுறுகிறேன்.எனவே கூட்டுத் தொகுதியாகவேனும் வெளியாக வேண்டும்.
அடுத்து எம்மவர்களது படைப்பாற்றலுக்கு களமமைக்கும் முயற்சியாக இந்த அவரி வெளிவருகிறது.

அண்மையில் மூன்றாவது மாநாட்டையும் வெற்றிகரமாக நடத்தி முடித்த உங்களை வாழ்த்துவதோடு Srilanka pen club இன் எதிர்கால திட்டங்கள் பற்றிய விடயங்கள் இதன் சமூகப் பங்களிப்புகள் என ஏதேனுமுண்டா?

அவசியமான ஒரு கேள்வி.
பெண்களின் சக்தி சாமான்யமானதில்லை. அவர்கள் முயற்சித்தால் தங்கி வாழ்வோராக இல்லாமல் சுயமரியாதையோடு வாழ நிச்சயம் முடியும்.இந்த அமைப்பை ஒரு நிறுவனமாக மாற்றி அந்த நம்பிக்கையையும் கொடுக்க வேண்டும்.சமூகத்தில் கணவனால் பிள்ளைகளால் கைவிடப்பட்ட திருமணமேயாகாமல் பிறரில் தங்கி வாழ்கிற பெண்களை ஓரிடத்தில் சேர்த்து ஒரு தொழில் முயற்சியைத் தொடங்கி அவர்களே நிர்வகித்து

அவர்களே அனுபவித்து ஒருவருக்கொருவர் அனுசரணையாக குழுமமாய் சேர்ந்துவாழ வழியமைக்க வேண்டும் என்பது என் பேரவா. இறைவன் அருள் பாலிக்க வேண்டும். அதற்கான பெரிய சவால் நிதிதான் .

அடுத்து எனது புத்தகங்களனைத்தையம் ஒன்றிணைத்து பென்கிளப் நூலகமொன்று அமைக்க வேண்டும்.

அடுத்தது Srilanka pen club ஐ ஒரு வெளியீட்டு நிறுவனமாகவும் மாற்ற வேண்டும்.

இப்போது நமது அமைப்பிற்கென்று ஒரு லெப்டப்கூட இல்லாத நிலையில்தான் வெளியீட்டு முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம்.

எவ்வாறு தொடர்பை ஏற்படுத்த வேண்டும்?

இலங்கையிலும் இலங்கைக்கு அப்பாலுமுள்ள ஆற்றலுள்ள அனைத்து முஸ்லிம் பெண்களும் இணையலாம்.இலக்கியம் கலைகள் மட்டுமன்றி எத்தகைய ஆற்றல்களுக்கும் களமுண்டு. மருத்துவம், விவசாயம், உளவியல, தையல், மனையியல், கைத்திறன்கள், தொழினுட்பம், பாடல் என எத்தகைய திறமைகளுள்ளவர்களும் குறைந்த பட்சம் ஆர்வமுள்ளவர்களும் கூட இணையலாம். +94770696569 என்ற வாட்சப் நம்பருக்கு விண்ணப்பிக்கலாம்.

நிபந்தனை என்றால் முரண் நடத்தைகளோ முரண் குணங்களுள்ளவர்களோ இணைய முடியாது.

இலக்கிய உலகில் உங்களுக்கென தனி இடத்தை பிடித்துள்ள நீங்கள் இன்றைய வளரும் இளைய படைப்பாளிகளுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்

நான் சொல்ல விரும்புவதெல்லாம் நிறைய வாசியுங்கள் என்பதுதான். அடுத்தவர்களின் படைப்புகளை காத்திரமான படைப்புகளை வேற்றுமொழிப் படைப்பாளிகளின் படைப்புகளை தேடித் தேடி வாசியுங்கள். அப்போதுதான் இலக்கியப் பரப்பில் நாங்கள் எங்கே நிற்கிறோம் எவற்றைக் கடக்க வேண்டுமென்பதெல்லாம் புரியும். எழுத ஆரம்பிக்கும்போதே தலைக்கணம் வந்துவிடக்கூடாது. அவ்வாறு வந்து விட்டால் அதே இடத்தில்தான் நிற்பீர்கள். உங்களைப் பெரிய எழுத்தாளராக எண்ணிக் கொள்ளாதீர்கள். பின் ஒருபோதும் பெரிய எழுத்தாளர்களாக முடியாது.எழுத ஆரம்பித்ததும் விருதுகளுக்கும் புகழுக்கும் ஆசைப்படாதீர்கள். உங்களுக்கு கிடைக்க வேண்டிய நேரத்தில் கிடைக்க வேண்டியன கிடைக்கும்.புகழுக்குரியவன் இறைவன் மட்டுமே.உங்கள் எழுத்தின் காத்திரத்தில் மிகுந்த கவனம் செலுத்துங்கள் என அன்பாய் வேண்டிக் கொள்கிறேன்.

ஓரிரு கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தவுடன் சொந்தமாக கவிதை புத்தகங்களை வெளியிடும் இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு நீங்கள் சொல்ல விரும்பும் கருத்து என்ன

அது அவரவர் விருப்பம்.அதில் தலையிட நம் யாருக்கும் உரிமை கிடையாது.எனினும் படைப்பாற்றலில் தேர்ச்சி பெற்ற பின்பே நமது நூல்களை வெளியிட வேண்டுமென்பது எனது தனிப்பட்ட கருத்து.நமது நூல்கள் எதுவும் இலக்கியப் பரப்பில் சமர்ப்பிக்காத பட்சத்தில் வருங்கால எழுத்துலகில் காணாமல் போவோம் என்றிருந்தாலும் வெளியிடப்படுகின்ற அனைத்து நூல்களும் நம்மை இலக்கிய வரலாற்றில் இணைத்து விடவும் முடியாது.எத்தனையோ பிள்ளைகள் பிறக்கின்றன.அத்தனை பிள்ளைகளும் பிற்காலத்தில் பிரகாசிப்பதில்லை.நூல்கள்கூட குழந்தைகள்தான்.சவலைப்பிள்ளைகள்கண்டு கொள்ளப்படாது போவது போல காத்திரமற்ற நூல்களும் காணாமலே போகும்.எனவே எங்களின் எழுத்தாற்றலை ஸ்திரப்படுத்திக் கொள்ளாமல் நூல் வெளியிடுவதில் தற்காலிக புகழ் கிடைக்குமேயன்றி நிலைக்காது. இலக்கிய வரலாறு என்பது பதக்கடைகளை ஒதுக்கி நிறைநெல்மணிகள் போன்ற படைப்புகளையே ஏற்கின்றன.

அன்று ஒரு கவிதையை அனுப்பிவிட்டு ஒவ்வொரு வாரமும் மிகுந்த எதிர்பார்ப்புடன் பத்திரிகைகளை பார்ப்பதும் வானொலியின் அருகே இருப்பது என எதிர்பார்ப்பு நிறைந்த காலமொன்று இருந்தது. ஆனால் தற்பொழுது அங்கே அந்த நொடியில் என படைப்புகளிற்கு ஏராளமான களங்கள் உண்டு. இதனை ஆரோக்கியமான மாற்றம், வளர்ச்சி என்று பார்க்கிறீர்களா.. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?

ஆரோக்கியமான மாற்றம் என்றும் சொல்வதற்கில்லை.
ஆனால் அதிகளவு களங்கள் கிடைப்பதும் புதியவர்கள் வரவேற்கப்படுவதும் ஆரோக்கியமான விடயம்தான்.அன்று அதிக களங்களில்லை. அதனால் புதியவர்கள்

ஒரு பத்திரிகை வெளியிடுவது கூட சுமையானதாயிருந்து. இடைநடுவில் கைவிட நேர்ந்தது.எனினும் இன்று இலத்திரனியல் சஞ்சிகைகளால் புதிய எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

இதே வேளை இலக்கியத் தரம் என்ற விடயம் மழுங்கடிக்கப்பட்டு வருகிறது.அனைத்து சஞ்சிகைகளுமே படைப்பின் இலக்கியத் தரத்தை பேணுகிறது என கூறவும் முடியாது. முகநூலில் என்றால் எந்த தடையுமில்லாத ஒட்டங்கள். சொந்த பிரச்சினைகளை கொட்டித் தீர்க்க.காதல் தாபங்களை கட்டவிழ்க்கவென்றெல்லாம் இலக்கியத்தை கையாள்கின்றனர். நன்மைகளும் தீமைகளும் கலந்த ஒரு விடயமாகவே இதனைப் பார்க்க முடியும்.அவரியில் ஏறி நின்று பொலி தூற்றினால் கணிசமான அளவு நெல்மணிகளாவது கிடைக்காமலா போகும்.

Srilanka Pen Club எனும் அமைப்பின் ஸ்தாபகராக உள்ள நீங்கள் உங்கள் அமைப்பு பற்றி எமக்கு அறிய தாருங்கள்..

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பாக இது காணப்படுகிறது. எழுத்தாளர்களே அதிகமிருந்தாலும் அனைத்துத் துறையினரும் இங்கே சங்கமமாகி இருக்கின்றனர்.
இலக்கியம், பேச்சுவன்மை, விமர்சனம், வாசிப்பு, கைப்பணி, தொழினுட்பம், தையல், வேற்றுமொழி படைப்பனுபவங்கள், இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள், நாட்டாரிலக்கியங்கள், சமையற்கலை, வரைதற் திறன், பயிற்சிப் பட்டறைகள், உளவியல் தீர்வுகள், மாணவர் வழிகாட்டல்கள், சஞ்சிகை நிகழ்ச்சி, மொழி பெயர்ப்பு விடயங்கள், சஞ்சிகை வெளியீடு, தொகுப்பு முயற்சிகள் என சிறந்த அடைவுகளைப் பெற்றிருக்கிறோம்.

அங்கத்தவர்களின் ஆற்றல்களை ஆற்றுப் படுத்தும் முயற்சியில் வெற்றியும் கண்டிருக்கிறோம்.கலாச்சார மீறல்களற்ற குடும்பக் கட்டமைப்புகளை சிதைக்காத ஆரோக்கியமான அமைப்பினூடு பயணிப்பதில் பெருமிதமும் திருப்தியுமடைகிறோம்.

சமூகத்தில் இன்னலுறும் பெண்களுக்கு குரல் கொடுப்பதும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எழுத்தின் மூலம் சமூகத்திற்கு அறியச் செய்வதும் என பெண்கள் சார்பாக நீங்கள் வெளிப்படுத்தும் படைப்புகள் மாற்றங்களை ஏற்படுத்துகின்றனவா?

நிச்சயமாக. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகராதா என்ன? பெண்கள் விழிப்புணர்ச்சி பெறுகிறார்களென்பதும் தாமும் வெளிப்படுத்தத் துணிகின்றனரென்பதும் ஆரோக்கியமானமுதல்விடயம்.நான்மட்டுமன்றி என்னைப்போன்ற பெண் கவிஞர்கள் ஆண்கவிஞர்கள்கூட பெண்களுக்காக ஆண்டாண்டு காலமாக எழுப்பிய எழுச்சிக் குரலே இன்று பெண்கள் சமூகத்தில் பாரிய முன்னேற்றத்தை மாற்றத்தைத் தந்திருக்கிறதென்றால் மிகையாகாது.

பாடசாலையில் ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரிடத்திலும் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தி விடுவதில்லையே. இதுபோல்தான் அதுவும்.கல்வி உரிமை கூட மறுக்கப்பட்டிருந்த பெண்கள் இன்று கல்வித்துறையில் சாதித்திருப்பவை ஏராளம். ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த விதவைகள் சமூகத்தில் சாதாரணமாக வாழ்வது எத்தனை முன்னேற்றம்.

வீட்டிலே முடக்கி வைக்கப்பட்டிருந்த பெண்கள் வெளியிலே சுதந்திரமாக தொழிலுக்கு

சென்று வருவது எத்தகைய பெரும் மாற்றம். இவ்வாறு எத்தனையோ நூற்றாண்டுகளாக பெண்களுக்காக என்போன்ற உங்களைப் போன்ற பலரால் எழுப்பப்பட்ட குரல்கள்தான் காரணம். கோடானு கோடி குரல்களுள் நாம் ஒவ்வொருவரும் பெண் படைப்பாளிகள் என்ற வகையில் இணைந்து கொள்வது நம் கடமையும்தான்.

பெண் படைப்பாளிகளிடத்து ஒரு கூட்டு முயற்சி அவசியமா?

அவசியம் எனக் கருதியே Srilanka Pen Club ஐ ஸ்தாபித்தேன்.ஒரு.கை ஓசை எழுப்பாதல்லவா? ஆற்றல்களும் அறிவும் நிரம்பிய பெண்கள் வீட்டை மட்டும் கட்டியாள்வதற்கு படிப்பு எதற்கு? தான் அறிந்தவற்றை தனதாற்றலை சமூகத்திற்கும் தேசத்திற்கும் பயன்படுத்துவது கடமையல்லவா?இம்மைக்கும் மறுமைக்கும் நம் அறிவினை பயன்படுத்த உரிமையில்லையா? ஆயினும் பெண்கள் அனேகர் சிந்திப்பதில்லை. காரணம் அவர்கள் செக்குமாடுகள் போல கட்டமைக்கப்பட்டிருக்கின்றனர். சிந்தனைக் கிளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களை மனைவியருக்கு திட்டமிட்டு தராத கணவர்களுமுள்ளனர்.

இடையறாத குடும்பச் சுமைகளிடையே பெண்களின் சிந்தனைகள் திட்டமிட்டோ திட்டமிடாமலோ மழுங்கடிக்கப்படுகிறது.

ஒரு பெண் தனது அத்தனை விருப்பங்களையும் குடும்பத்திற்காய் தியாகம் செய்கிறாளே. அவள் தனது உணர்வுகளை வெளிப்படுத்த ஆற்றல்களை வளர்க்க இங்கிருக்கின்ற தடைகளென்ன?தடைகள் கணிசமான அளவு தகர்த்தெறியப்பட்டுள்ளது என்பதை பெண்கள் உணராததே முக்கிய காரணம். இன்றைய கணவன்மாரை போற்ற வேண்டும். மனைவியை ஒரு தோழியாய் சகமனுசியாய் ஒரு உணர்வுள்ள ஜீவனாய் பார்க்கும் ஆண்கள் இன்று அனேகம் .அன்றைய தந்தையர்போல் மனைவிக்கு கோடுகீறி மறிக்கும் ஆண்கள் இன்று மிகச்சிலரே.இதுவும் மாறும்.

***Srilanka* பெண் கிளப் என்னும் ஆளுமை மிகுந்த பெண்கள் அமைப்பில் உள்ள உறுப்பினர்கள், மற்றும் உங்கள் மாநாடுகள், வெளியீடுகள், செயற்பாடுகள் பற்றி கூறுவீர்களா..?**

நிச்சயமாக. பலதரப்பட்ட தகைமையுள்ள பெண்கள் இதில் இயங்குகிறார்கள். ஆசிரியைகள் அதிபர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வைத்தியர்கள் வானொலி அறிவிப்பாளர்கள் சுயதொழில் முயற்சியாளர்கள் விவசாய உத்தியோகத்தர்கள் தனியார் தொழில் முகாமையாளர்கள் பல்கலைக்கழக மாணவிகள் கலாநிதிகள் மார்க்க அறிஞர்கள் முன்பள்ளி அதிபர்கள் ஆசிரியைகள் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் நாட்டிற்கு வெளியே இருப்பவர்கள் இல்லத்தரசிகள் என பல்வேறு தரப்பினர் அடங்கிய கதம்ப மாலையிது.

2021 ல் நிந்தவூர் தோம்புக் கண்டத்தில் முதலாவது தேசிய முஸ்லிம் பெண்கள் மாநாடு வெற்றிகரமாக நடத்தினோம்.அதன்போது அறுபத்து மூன்று முஸ்லிம் பெண்களின் கவிதைகளடங்கிய சுட்டு விரல் என்ற கவிதைத் தொகுதியினை வெளியிட்டோம்.இதுவே முஸ்லிம் பெண்களின் முதலாவது கவிதைத் தொகுதியுமாகும்.

2022 ல் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் எமது தேசிய மாநாடு நடைபெற்றது. நாட்டின் பல பிரதேசங்களிலிருந்தும் அறுபது பெண்களளவில் கலந்து சிறப்பித்தனர்.

அமைப்பின் வளர்ச்சிக்காய் உழைத்தவர்களை கௌரவித்தோம்.

மூன்றாவது மாநாடு 2023 ல் காத்தான்குடி CIG மண்டபத்தில் நடைபெற்றது.அமைப்பின் வளர்ச்சிக்காய் சஞ்சிகை முயற்சிக்காய் உழைத்த உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டனர்." இமயம் தழுவும் இறக்கைகள் என்ற ஆங்கில மொழி பெயர்ப்புக் கவிதை நூலினை வெளியிட்டு வைத்தோம்.

நான்காவது மாநாடு 2024 ல் திருகோணமலையில் நடாத்த எதிர்பார்க்கப்படுகிறது.

கவிதைத் தொகுதிகள் தவிர இவ்வருட முற்பகுதியில் எமது அமைப்பின் அங்கத்தவர்கள் பதினைந்து பேரின் சிறுகதைகளைத் தொகுத்து உலகம் முழுதும் எங்கள் கதைகள் என்ற சிறுகதை தொகுதியினை வெளியிட்டோம். தவிர அவரி என்ற காலாண்டிதழை வெளிக்கொணர்கிறோம்.

2021 ல் முதலாவது இதழ் வெளியானது. பெண்களுக்கான சஞ்சிகையொன்றினை வெளியிட வேண்டுமென்பது எனது நீண்டகால அபிலாசை.அதனை இந்த அமைப்பின் மூலம் செயற்படுத்த முனைந்தேன். தற்போதைய எமது அமைப்பின் பொதுச் செயலாளர் ஷாமென் நிஸாம்டீன் அதற்காக ஆதரவுக் கரம் நீட்டினார். அவரியின் வரலாற்றில் அவருக்கும் பங்கு உண்டு.

அவரி பல்வேறு விடயங்களையும் தாங்கி எமது அங்கத்தவர்களுக்கு களமாக கைகொடுத்தது. தற்போது அமைப்பிற்கு வெளியேயுள்ள ஆற்றலுள்ளபெண்களுக்கும்களம்கொடுக்கிறது. பதினோராவது இதழ் வெளிவரவுள்ளது.

மூலையிலே ஒதுங்கி தமதாற்றல்களைத் தாமே உணராது சிந்தனைத் தேக்கத்துடனிருக்கும் ஆற்றலுள்ள பெண்களுக்கு வழிகாட்டி விடுவதே எமது தலையாய நோக்கம்.இன்று நூலாசிரியர்களை விமர்சகர்களை தீவிர படைப்பாளிகளை எமது அமைப்பு பட்டை தீட்டி பிரகாசிக்கச் செய்திருக்கிறது.யாரிடமும் யாரும் ஆற்றல்களை வளர்க்க முடியாது. அவற்றை அவர்களே இனம்காணச் செய்து தட்டிக் கொடுப்பதொன்றே எமது பணி.நாமே திகைக்குமளவிற்கு எங்கள் பெண்களின் ஆற்றல்கள் இன்று பிரவாகிக்கின்றன.

எத்தகைய உயர்ந்த ஆற்றலுடையோராயினும் ஒற்றுமையை சீர் குலைப்போர் ஒழுக்க விழுமியங்களை மீறுவோர் குடும்பக் கட்டமைப்புக்களை சிதைப்போர் சுயநலமுடையோர்க்கு இங்கு இடமில்லை. அவர்களை ஒதுக்கி விடுகிறோம்.இது எங்கள் பெரும் குடும்பம்.இந்தக் குடும்பத்தில் நடத்தை முரண்களற்ற எவரும் இணையலாம்.

இறுதியாக சொல்ல விளைவது?

துணிந்தெழு பொதுமைப் படுத்தப்பட்டதாக சகலர்க்கும் களம் அமைக்கும் பணியில் முன்னணியில் திகழ்ந்து வருகிறது.சீரியதோர் பணிசெம்மையாகஇடையறாதுநிகழ்ந்துவருவது அதுவும் பன்முகங்களில் பிரகாசிப்பது அத்தனை படைப்பாளிகளுக்கும் ஆரோக்கியமான விடயம்தான்.என்னையும் ஒரு படைப்பாளியாக முன்னிறுத்தி செவ்வி கண்ட சகோதரி ஷாமென் நிஸாம்டீனுக்கும் அங்கீகரித்த பிரதம ஆசிரியல் J.M பாஸித் அவர்களுக்கும் துணிந்தெழு ஆசிரியர் குழுவினருக்கும் மனமார்ந்த நன்றிகளை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

துதிப்பவர்கள் முன் துணிந்தெழு நீ..

எத்தனை உயரம்
எத்தனித்தும்
எட்டவில்லை என்பது தான்
ஏழைகளின் முனங்கல்கள் என்றால்
எதற்கும் விடவில்லை என்பதே மங்கையர் முனகல்...

கட்டுண்ட குடிசைக்குள்
சுருண்டு கொண்டு
கனவுகளையும் கட்டிப் போட்டு
பிறரின் பேச்சுக்களால் பூட்டப்பட்டு இருக்கும்
மங்கையருக்கு ஓர் செய்தி...

மரணத்தின் பாதியாயினும்
மனிதன் உண்டாக
பிரசவத்தில் துடிக்கும்
பெண் வலிமைகளால் ஏன் அவளது
கனவுகளை தனதாக்க முடிவதில்லை...

பூட்டுப் போட்ட கதவுகளை விட
பெண் கனவுகளுக்கு பூட்டுப் போட்டு
ஏழ்மை என்ற சொல்லுக்குள் கட்டுப்பாடு விடுக்கும்
மனிதர்கள்
மங்கையென்பது மாக்கள் என்றெண்ணி விட்டனர்...

துணிந்து எழுந்து
வாழ் சிறக்க நீ
பறந்து
மதி மீது கால்ப்பதிக்க
தாயங்க மாட்டேன் என்று விழித்து வா

பெண்ணே
தூற்றும் இந்த உலகம்
போற்றப் போவதில்லை உன்னை ஒரு போதும்...

ஆடவர் சிந்தனையை விட
பெண்டிர் குலத்தின்
பெரிய வார்த்தைகள்
நெறிதவறா வேதமென்றெண்ணி
துதித்து வாழும்
மக்களுக்குள் உரத்துக் கூறிடு
பெண் என்பது அடிமையல்ல ஆயுதம் என...

எட்டிப் பிடிக்க
ஏணிகளாகவும்
முயன்று வெல்ல
முந்தியவளாகவும்
முறைசார் அனுபவக் கற்றலில்
முதுமாணிப்பெற்றவள் பெண் என உரத்துக் கூறிட துணிந்து வா...

தூரத்தும் முடக்கங்கள்
அடக்கும் அடிமைத்தனங்களை
அடியோடு
அகற்றிட வா பெண்ணே
துணிந்தெழுந்து வா நீ...

F. Husna Riyal
Ibbagamuwa
Kurunegala

உலக பணக்கார பெண்மணிகளுள் ஒருவர்

நீத்தா அம்பாணி

நீதா அம்பானி உலக பணக்காரர்களில் ஒருவரான முகேஷ் அம்பானியின் மனைவி. இவர் இந்தியாவின் பணக்கார பெண்மணிகளுள் ஒருவராவார்.

இவர் 1963 நவம்பர் 1 ஆம் திகதி மும்பையில் பிறந்தார். ரவீந்திரதலால் மற்றும் பூர்ணிமா தலால் தம்பதிகளின் மகளாவார். இவர்கள் நடுத்தர குஜராத்திய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

வணிகவியலைக் கற்று இளங்கலை பட்டம் பெற்றுள்ளார். பரதநாட்டியத்திலும் அதிக ஈடுபாடு காரணமாக நாட்டியத்தையும் கற்றுக் கொண்டுள்ளார்.

இந்தியாவின் பணக்கார பெண்மணிகளுள் ஒருவரான இவரது சொத்தின் மதிப்பீடு 40 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

ரிலையன்ஸ் பவுண்டேஷன் என்னும் அறக்கட்டளையின் தலைவர் ஆவார். மும்பை இந்தியன்ஸ் துடுப்பாட்ட அணியின் உரிமையாளரும் ஆவார். அத்தோடு மும்பையில் அமைந்துள்ள தீருபாய் அம்பானி சர்வதேச பள்ளியின் நிறுவனர் ஆவார்.

2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ரிலையன்ஸ் பவுண்டேசன் நீத்தா அம்பானியால் நடத்தப்படுகிறது. ரிலையன்ஸ் நிறுவனத்துடன் இதுஇணைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள மிகப்பெரிய பவுண்டேசன்களுள் இதுவும் ஒன்றாகும். கல்வி, விளையாட்டு, உடல்நலம், அவசரக்கால உதவி,பெண்கள்முன்னேற்றம் ஆகிய துறைகளில் இது செயல்படுகிறது.

மும்பை இந்தியன்ஸ் இந்தியன் ப்ரீமியர் லீக் துடுப்பாட்ட அணிகளுள் ஒன்றான மும்பை இந்தியன் அணியின் உரிமையாளர் இவர் ஆவார். இவ்வணி சேம்பியன் விருதினை 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பெற்றது. மேலும் இந்தியன் ப்ரீமியர் லீக் போட்டிகளில் 2013,2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வெற்றி பெற்றது. அனைவருக்கும் கல்வி (Education for All) எனும் திட்டத்தினையும் மும்பை இந்தியன்ஸ் அணி முன்னெடுத்துச் செய்கிறது.

வாய்ப்புக்கிடைக்காத 70,000 குழந்தைகள் அனைவருக்கும் கல்விதிட்டத்தின் மூலம் நவீன வழிக் கல்வி பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது.

தீருபாய் அம்பானி சர்வதேசப்பள்ளியினை உருவாக்கி நிருவகித்து வருகிறார். இந்தியாவின் மிகச் சிறந்த பள்ளியாக இப்பள்ளி திகழ்கிறது. என்.டி.டி.வி, இந்துஸ்தான் டைம் போன்ற இதழ்கள் இப்பள்ளியை இந்தியாவின் தரவரிசையில் முதலிடம் பெறும் பள்ளி எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேச ஒலிம்பிக் அமைப்பின் உறுப்பினராகவும் நீத்தா அம்பானி உள்ளார். 3 ஜூன் 2016 அன்று உறுப்பினராக நியமிக்கப்பட்ட எண்வரில் நீத்தா அம்பானியும் ஒருவர்.

சர்வதேச ஒலிம்பிக் அமைப்பின் 129 வது கூட்டத்தில் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 4 ஆகஸ்ட் 2016 அன்று உறுப்பினராக இவர் அறிவிக்கப்பட்டார். இந்தியாவிலிருந்து இப்பதவியைப் பெற்ற முதல் பெண்மணி இவராவார்.

இவரின் பதவிகள் :

• 2014 ஆம் ஆண்டில் நீத்தா அம்பானி ரிலையன்சு இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தின் இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

• இவர் பன்னாட்டு ஒலிம்பிக் குழுவில் பதவியேற்ற முதல் இந்திய பெண்மணி.

• மும்பை இந்தியன்ஸ் என்னும் இந்தியன் பிரீமியர் லீக்கின் துடுப்பாட்ட அமைப்பை நடத்தினார்.

• எல்லாருக்கும் கல்வி என்னும் அமைப்பைத் தொடங்கி 70000 ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி பற்றிய விழிப்புணர்வைப் பரப்பி உதவிகளும் செய்தார்.

இன்னும் பல உதவிகளையும் அவர் செய்து கொண்டு இருப்பார்.

தொகுப்பு :
எழுத்தாளர்
பயாஸா பாஸில்
துணிந்தெழு சஞ்சிகை
ஆசிரியர் குழு உறுப்பினர்

ஸ்கை தமிழ் விருது விழாவைப்பற்றிய நேர்காணல்

1. ஸ்கை தமிழ் விருது விழா என்றால் என்ன? அவ்வாறு உங்கள் ஊடகத்தின் ஊடாக விருது வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு தோன்றியது?

கத்தாரில் இயங்கி வரும் முதன்மையான தமிழ் ஊடகமாக திகழும் எமது ஸ்கை தமிழ் ஊடகத்தின் 4 வருடப்பூர்த்தியை முன்னிட்டு இந்நிகழ்வு நடைபெற இருக்கிறது.

ஸ்கை தமிழ் விருது விழா என்பது உலகளாவிய தமிழ் பேசும் மக்களின் திறமைகளை அவர்களின் சாதனைகளை கௌரவிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகும். தமிழ் பேசும் மக்களின் ஆற்றல்களையும் அவர்களின் திறன்களையும் உலகறிய செய்யும் முயற்சியாக, நாங்கள் இந்த விருது விழாவை ஏற்பாடு செய்துள்ளோம். அவ்வாறு சமூகத்தில் மறைந்துள்ள ஆற்றல் மிகுந்தவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதே இந்த விழாவின் முக்கிய நோக்கமாகும்.

2. இதற்கு முன்னர் இவ்வாறான விருது விழாவை ஏற்பாடு செய்து உள்ளீர்களா?

ஆம், 2022-ல் இலங்கையில் உள்ள குறிப்பிட்ட ஆளுமைகளை இனம் கண்டு துணிந்தெழு விருது வழங்கி வைத்தோம். அதன் பின்னர் கடந்த வருடம் இலங்கை மற்றும் இந்திய கத்தார் வாழ் ஆளுமைகளை கௌரவிக்கும் முகமாக ஸ்கை தமிழ் விருது விழா கத்தாரில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றதுடன் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்விருது விழாவில் பிரதம அதிதியாக கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதுடன் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமரும், இலங்கை தேசிய பத்திரிகை தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவரும் இன்னும் பல தலைவர்களும் கலந்து சிறப்பித்தனர். கல்வி, கலை,விளையாட்டு, வணிகம், சமூக செயற்பாடு, ஊடகத்துறை, எழுத்து துறை மற்றும் இலக்கியத்துறை போன்ற துறைகளில் 15 இலங்கையர், 15 இந்தியர் என்ற அடிப்படையில் தெரிவு செய்து விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதனைத் தொடர்ந்து இந்த வருடம் இலங்கையில் நடைபெற உள்ள விருது

விழாவில் இலங்கை ஆளுமைகள் கௌரவிக்கப்பட உள்ளனர்.

3. முக்கியமாக எத்துறை சார்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கபட இருக்கிறது?

இதில் இலக்கியம் மற்றும் கலாச்சாரம், கல்வி, வர்த்தகம், சமூக சேவை, விளையாட்டு, நவீன தொழில்நுட்பம், ஊடகம் உள்ளிட்ட பல துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட உள்ளன. இதில் பத்து பிரிவில் 30க்கும் மேற்பட்டவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட இருக்கிறது. இதில் முக்கியமாக தேசியரீதியில் ஆளுமைகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

4. பல விதமான ஆற்றல்களுடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் பலருக்கு மத்தியில் பொருத்தமான நபர்களுக்கு விருது வழங்குவதற்கான முக்கிய நிபந்தனைகள் ஏதும் உண்டா?

ஆம், சரியான ஆளுமைகளுக்கு விருதுகளை வழங்குவதற்காக நாங்கள் சில முக்கிய நிபந்தனைகளை வகுத்துள்ளோம். விருதுகள் வழங்கப்படும் நபர்களின் சாதனைகள், அவர்களது துறையில் ஆக்கபூர்வமாக செயற்பட்டு வந்ததற்கான ஆதாரப்பூர்வமான தகவல்கள்,
இது அவர்களின் தொழில்முறைகள், சமூக சேவை, அல்லது துறையின் மேம்பாட்டிற்கு அவர்கள் செய்த பங்களிப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். விருதுகள் வழங்கப்படும் நபர்கள், குறித்த துறையில் நீண்ட காலமாக தொடர்ந்து பங்களித்து வந்தவராக இருக்க வேண்டும்.

விருதுகளை வழங்குவதற்கான முடிவுகளை சிறந்த நிபுணர்களைக் கொண்ட தெரிவுக்குழுவினரால் (Jury Panel) பரிசீலிக்கப்பட்டு தெரிவு செய்யப்படுவர்கள்.

5. இலங்கையில் நடை பெறவிருக்கும் இவ் விருது விழா பற்றிய தெளிவான விடயங்களை சற்று வாசகர்களுக்காக விபரிக்க முடியுமா?

இலங்கையில் நடைபெறவிருக்கும் ஸ்கை தமிழ் விருது விழா 2024, இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஒரு மேடை ஆகும்.

இந்த நிகழ்வில் தமிழ் சமூகத்தின் பெருமையை உயர்த்தும் விதமாக, பல துறைகளில் சிறந்து விளங்கும் ஆளுமைகளுக்கு விருதுகள் வழங்கப்படும். இது தமிழ் பேசக்கூடிய சமூகத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாகவும் இருக்கும்.

இவ்விழாவின் மற்றொரு சிறப்பம்சமாக, உலகின் பல பகுதிகளில் வாழும் தமிழர்கள், குறிப்பாக இந்தியா, கத்தார், கனடா, ஐரோப்பா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் இந்த விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆகஸ்ட் 31ஆம் திகதி விண்ணப்பம் முடிவடைந்து செப்டம்பர் இறுதிப் பகுதியில் இந்த விருது விழா நடைபெற உள்ளது.

நடைபெறும் இடம் திகதி என்பவை பின்னர் அறிவிக்கப்படும்.
எமது இணையதளம் மற்றும் சமூக வலைதளத்தை பின் தொடர்வதின் ஊடாக இது பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

6. உங்களது எதிர்கால திட்டங்கள் பற்றி குறிப்பிடுங்கள்?

இறைவனுடைய உதவியை கொண்டு அடுத்த வருடம் இந்தியா மற்றும் மலேசியா நாடுகளில் தமிழ் பேசும் ஆளுமைகளை கௌரவிக்கும் வகையில் நாங்கள் விருது விழாவினை ஏற்பாடு செய்ய திட்டமிட்டுள்ளோம்.

7. இறுதியாக, தினகரன் பத்திரிகை, வாரமஞ்சரியின் அனுசரணை பற்றி குறிப்பிடுங்கள்?

தமிழ் சமூகத்தின் தலைசிறந்த ஊடகங்களில் ஒன்றாகிய தினகரன் பத்திரிகை பெருமை மிகு அனுசரனை நிறுவனமாக கை கொடுக்கின்றது.
தமிழ் மக்களிடம் விரைவாகவும் விரிவாகவும் செய்திகள் சென்றடைந்துள்ளன.

தினகரன் பத்திரிகை வழங்கும் இந்த ஊடக அனுசரணையானது விழாவை மேலும் சிறப்பிக்கவும், அதனை ஒரு சர்வதேச பரிமாணத்திற்கு கொண்டு செல்லவும் முக்கிய பங்காற்றும்.

நேர்காணல்
முனீரா அப்துல் வாஹித்.

புகைப்படப் பகுதி

எனது விழிகள்

கருப்பொருள்: இயற்கையின் தாய்மை



எம்.ஜே.ஜவ்ஸன் அஹமட்
மருதமுனை



ஸீனா லாபிர்
வெலம்பொடை

ஜெ.எப். வஸீமா ஆஷா
ஓட்டமாவடி



ஸிரீன் ஸீபா
வாழைச்சேனை



பாத்திமா ஸும்லா
பகினீகஹவெல

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்

பாத்திமா தில்சானி
நிந்தவூர்



அம்னா இர்ஷாத்
கம்பொலை



ராசிக் பஸ்லான்
படுபிடிய

ஷீபா இப்றாஹீம்
மருதமுனை

உங்கள் தரமான புகைப்படங்களை
எமக்கு அனுப்பி வையுங்கள்.
+94752473075

துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

உங்கள் விளம்பரங்களையும்
குறைந்த கட்டணத்தில்
இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249

#Thuninthelu www.skytamilnews.com